# மனித உரிமைகள்

Dr. J. தியாகராஜன்



நிர்மலா பதிப்பகம், மதுரை-1

# அறிமுகம்

## மனித உரிமைகள் - ஒரு கண்ணோட்டம்

### முன்னுரை

தனிமனிதப் பண்பியல்புகள் தழைத்தோங்க பாதுகாப்பு அளிப்பது தான் உரிமை. மனிதன் தனக்கென்று சில உரிமைகள் உண்டென்று என்று உணர்ந்தானோ அன்றே அவன் முழு ஆளுமை பெற்ற மனிதனாகிவிட்டான். தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட அவ்வுரிமைகள் தனக்கு மட்டுமல்லாமல் தன்னைப் போலொத்த பிற மனிதருக்கும் உண்டு என என்று உணரத் தொடங்கினானோ அன்றே அவன் அதன் மூலம் கூடி வாழும் இயல்பையும் பெற்றுவிட்டான். அதன் மூலம் மனித சமுதாயம் தோன்ற அடிப்படையிட்டான். சமுதாயமாகக் கூடி வாழும்போது அந்த உரிமைகள் மேலும் பண்பட்டன. அந்த உரிமைகளைக் காப்பதற்கென உருவாக்கப்பட்ட அமைப்பு தான் அரசு. ஆனால் அந்த அரசு சர்வாதிகாரம் பெற்றபோது அது அவன் உரிமைகளைப் பறிப்பதாகிவிட்டது. எனவே அவன் தன் உரிமைகளுக்காக அரசை எதிர்த்துப் போராட வேண்டியதாயிற்று. இவ்வாறு உரிமைகளுக்காகப் போராடும் மனிதனுக்கும், அவ்வுரிமைகளை ஒரு வரையறைக்குள் கொண்டு வர முயற்சிக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறும் இடைவிடாப் போராட்டம்தான் வரலாறு.

**உரிமைகள் தோற்றம் பற்றிய கொள்கைகள்**

உரிமைகள் எவ்வாறு தோன்றுகின்றன? "தான்", "தனக்கு", "தன்னுடைய" என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் முதலில் உரிமைகள் தோன்றுகின்றன. இது பொருளாக இருந்தால் அது அவனது உடமையாகிறது. மனிதராக இருந்தால் அது அவனது உறவாகிறது. எண்ணங்களாக இருந்தால் அது அவனுக்கு சொந்தமாகிறது. இந்த உடமை, சொந்தம், பந்தம் ஆகியவற்றிலிருந்துதான் உரிமைகள் தோன்றுகின்றன.

**இயற்கை உரிமைக் கொள்கை**

மனிதனுக்கு உரிமைகள் இயல்பானவை. எனவே இயற்கையிலேயே மனிதன் உரிமை பெற்று விளங்குகிறான் என்பது இயற்கை உரிமை கோட்பாடு எனப்பட்டது. இதைத் தான் பிரெஞ்சு தத்துவ ஞானி ரூஸோ, "மனிதன் சுதந்திரமானவனாகப் பிறக்கிறான். ஆனால் எல்லா இடங்களிலும், அடிமைத் தளைகளில் கட்டுண்டு கிடக்கிறான்" என தமது "சமூக ஒப்பந்தம்" என்ற நூலின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**சட்டவியல் உரிமைக் கொள்கை**

உரிமைகளை உருவாக்குவது அரசு. அவற்றைத் தனிமனிதன் அனுபவிக்க அனுமதிப்பதும் அரசு. அவற்றைப் பாதுகாப்பதும் அரசு. பிறர் உரிமையில் அது குறுக்கிடாதிருக்க வரையறை செய்வதும் அரசு. இவ்வாறு அரசு தான், உரிமைகளின் ஆக்கல், காத்தல், அழித்தல் பணிகளைப் புரிகிறது என சட்டவியல் உரிமைக் கோட்பாட்டாளர்கள் கூறுவர்.

**சமூகநலக் கொள்கை**

சமூகமாகக் கூடி வாழும்போது தான் உரிமைகள் தோன்றுகின்றன. அந்த உரிமைகள் சமூக நலன்களை வளர்ப்பதாக அமைகின்றன என சமூகநலக் கொள்கையாளர்கள் கூறுவர்.

**ஆளுமை வளர்ச்சிக் கொள்கை**

தனிமனித ஆளுமையில் உரிமைகளும், உரிமைகளால் தனிமனித ஆளுமையும் தோன்றி வளர்வதாகக் கூறுவர்.

**உரிமைகளின் பிறப்பிடம் அரசே**

ஒரு தனி குடிமகனது தனித்தன்மை சிறப்புடன் வளர்வதற்கு என்னென்ன வாய்ப்புகள் தேவையோ அவற்றின் கூட்டே உரிமைகளாகும். ஒருவன் தன்னால் முடிந்த அளவுக்குச் சீராக வாழ வேண்டுமென்றல் சமுதாய வாழ்வில் உரிமைகள் அடிப்படைத் தேவைகளாகும். ஆனால் இவ்வுரிமைகளை நாம் வாழும் நாட்டிலுள்ள அரசு ஏற்றுக் கொண்டு, அவற்றை நாம் நுகர உறுதுணையாக இருந்தாலொழிய அவை உரிமைகளாகக் கருதப்படமாட்டா. அரசாங்கமே உரிமைகளின் பிறப்பிடமாகும். இவ்வுரிமைகள் சட்டத் தொகுப்புகளால் பாதுகாக்கப்படும். இவற்றை யாராவது தடுக்கவோ நசுக்கவோ முற்பட்டால் மக்களுக்குக் காவல்துறையினரும், நீதிமன்றத்தினரும் உதவுவதோடு வருமுன் காப்போராகவும் செயல்படுகின்றனர். எனவே மனிதனது அடிப்படை வாழ்விற்கு உரிமைகள் இன்றியமையாதவையாகும். இவற்றின் காவலனாக அரசு விளங்குகிறது.

**உரிமைகளின் தன்மை**

கூர்ந்து பார்த்தால் உரிமைகள் என்ற சொல்லுக்கு குறிப்பிட்ட ஒரு பொருளை நாம் சொல்ல முடியாது. பல கருத்துணர்வுகளை விளக்கும் வகையில் அரசியல் தத்துவ ஞானிகள் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வகையில் உரிமைகளைப் பகுத்துள்ளனர்.

இயற்கையான உரிமைகள், வரலாற்று உரிமைகள், மரபுவழி உரிமைகள், ஒழுக்கம் சார்ந்த உரிமைகள், சட்ட ரீதியான உரிமைகள் போன்றவை பல்வேறு நாடுகளின் அரசியலமைப்பில் உள்ளன. பல்வேறு

தலைப்புகளில் உரிமைகள் பட்டியல் - அடிப்படை உரிமைகள் நிரல் இணைக்கப்பட்டுள்ளன. அமெரிக்க, அயர்லாந்திய, இந்திய, ஜப்பானிய அரசியலமைப்புகளில் இவற்றைக் காணலாம். உரிமைகள் என்ற சொல்லுடன் நெருங்கிய தொடர்புடைய சொல் கடமைகள் என்பதாம். கடமையோடு பொறுப்பு, கட்டுப்பாடு, வரையறை, பாதுகாப்பு ஆகிய கருத்துகளும் உரிமையோடு இணைந்து செல்வனவாம்.

## வரலாற்று உரிமைகள்

மரபு வழியாக வரும் உரிமைகள் வரலாற்று உரிமைகள் எனப்படும். இவை நீண்ட கால அளவில் உருவாகி வளர்ந்தவை. நன்கு நிலைநாட்டப்பெற்றவை. சட்டத்திற்குரிய வலிமையும் வந்துவிடும். ஒரு நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள் அந்நாட்டுச் சட்டங்களின் தன்மையையும், செயலையும் கட்டுப்படுத்தும். எடுத்துக்காட்டாக, தனியார் நிலம் வழியாகச் செல்லும் ஒரு பாதை பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படுமேயானால் அதனை நாளடைவில் பொதுமக்களின் நன்மைக்காக பொது வழியாகப் பயன்படுத்தும் உரிமையினை அப்பகுதி மக்கள் பெறுவர். ஆனால் எல்லா உரிமைகளும் வரலாற்றில் விளைந்தவை அல்ல.

பழக்கவழக்கங்கள், மரபுகள், வழக்காறுகள் ஆகியவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம், முற்றிலும் ஒழிக்கப்படலாம். இப்போக்கை வரலாற்றின் பல கட்டங்களில் நாம் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை உடன்கட்டை ஏறும் வழக்கம் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கைம்பெண்ணின் உரிமையாக இருந்தது. நாளடைவில் பகுத்தறிவுக்கொவ்வாத இப்பழக்கம் கண்டிக்கப்பட்டு, பெண்டிங் பிரபுவால் இயற்றப்பட்ட சட்டத்தின்படி தடை செய்யப்பட்டது. அதைப்போல பல நூற்றாண்டுகளாக சாதிக் கொடுமையின் அடிப்படையில் தீண்டத்தகாதவர் என்ற பிரிவினர் ஆலயத்தினுள் சென்று வழிபடுவது தடை

செய்யப்பட்டிருந்தது. ஆனால் சட்டத்தின் வாயிலாக இக்கொடுமை நீக்கப்பட்டு அனைவருக்கும் சம வழிபாட்டுரிமை ஆலயப் பிரவேசத்தால் தரப்பட்டது. எனவே வழக்காறு முறையிலான உரிமைகள் மாற்றத்திற்குரியன.

**இயற்கையான உரிமைகள்**

இயற்கையான உரிமைகள் மிகப்பழமையானவை. மனிதனிடம் இயல்பாக இயற்கையாகக் காணப்படும் உரிமைகள் அவன் மனிதன் என்பதாலேயே அவனுக்கு உரியனவாக அமைகின்றன. இவ்வுரிமைகளில் மனிதன் சீராக நாகரீகம் அடைவதற்கு முன்பேயும், முறையான ஆட்சி அமைப்புகளை ஏற்படுத்தும் முன்பேயும் அவனைச் சார்ந்திருந்தன. ரோமானியப் பேரரசில் சிசரோ போன்ற சட்ட வழக்குரைஞர்கள் உரிமைகளைப் பற்றி வாதாடியுள்ளனர்.

இயற்கையான உரிமைகள் யாவை என்பது குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு இருந்துள்ளது. மனிதனது, இயல்பான குணங்களைச் செம்மையாக வளர்த்துக் கொள்ளவும் அவனது தனித்தன்மையை முழுமையாகப் பெறவும் என்னென்ன உரிமைகள் தேவையோ, அவையெல்லாம் இயற்கையான உரிமைகளென பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் கருதினர். "மனிதனது உள்ளத்திலே இயற்கையும், இறைவனும் இணைந்து வித்திட்டிருந்த உணர்வுகளின் மறு வெளிப்பாடே இயற்கையான உரிமைகள்" என சிசரோ குறிப்பிட்டார். "மனிதனது இயற்கையான ஆற்றல்களே உரிமைகள்" என தாமஸ் ஹாப்ஸ் கூறியுள்ளார். "உயிர்வாழுமுரிமை, சொத்துரிமை, தன்னுரிமை ஆகியவை நாகரிகமுற்ற சமுதாயத்தில் இயல்பாக அனைவருக்கும் உரியனவாக இருப்பதால் அவையே இயற்கையான உரிமைகள்" என ஜான் லாக் குறிப்பிட்டுள்ளார். தன்னுரிமையோடு மனிதன் தான் விருப்பப்பட்டதைச் செய்ய உதவுபவையே இயற்கையான உரிமைகள் என்கிறார் ரூசோ. நில மானிய

முறையிலிருந்த அடிமைத்தனத்தை எதிர்க்கவும், வல்லாட்சியாளரையும், கொடுங்கோலையும் கண்டிக்கவும் இயற்கையான உரிமைகள் கோட்பாடு மிகவும் பயனுடையதாக இருந்தது. இருப்பினும் இயற்கையான உரிமைகள் என்பது புரிந்து கொள்வதற்குக் கடினமாகவும், குழப்பம் தரக்கூடியதாகவும் உள்ளன. இதற்குக் காரணம் வேறுபட்ட நிலைகளில் மாறுபட்ட கருத்துகள் இவற்றைப் பற்றி வெளியிடப்பட்டமையே ஆகும்.

## ஒழுக்கம் சார்ந்த உரிமைகள்

அந்தந்த சமுதாயத்திலுள்ள ஒழுக்கநெறி, உள்ளச் சான்றுக்கேற்ப மனிதனது ஒழுக்கம் சார்ந்த உரிமைகள் அமையும். இவ்வுரிமைகள் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்க விதிமுறைகட்கு உட்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக, கணவனால் பரிவோடு நடத்தப்பட வேண்டுமென்பது மனைவியின் ஒழுக்கம் சார்ந்த உரிமையாகும். அதைப் போல வகுப்பறையில் ஆசிரியரிடம் மாணவர்கள் மரியாதையோடு நடந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்ப்பது ஆசிரியரின் உரிமையாகும். இந்த ஒழுக்கம் சார்ந்த உரிமைகளை அரசு தன் சட்டதிட்டங்களால் உறுதிப்படுத்த முடியாது. சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் ஒழுக்க நெறிமுறைக்கேற்ப இவ்வுரிமைகள் விளங்கும். ஒழுக்க நெறி உரிமை ஒரு சட்டமாக அரசால் இயற்றப்பட்டால் அது சட்ட உரிமையாக உறுதிப்படும்.

## சட்டத்தால் பெறப்படும் உரிமைகள்

சட்ட உரிமைகள் அனைத்தும் அதிகார இறைமைத் தன்மை வாய்ந்த அரசிடமிருந்து பிறக்கின்றன. உயிர்வாழ உரிமை, தன்னுரிமை, சொத்துரிமை ஆகியவையனைத்தும் அரசிடமிருந்தே பெறப்படுகின்றன. தாமஸ் ஹாப்ஸ், பென்தாம் போன்ற அரசியல் தத்துவ அறிஞர்கள் இவ்வுரிமைகளின் மேன்மையை வலியுறுத்தினர். ஜான் ஆஸ்டினும் இதை வலியுறுத்தினார். இவர்கள் இயற்கையான உரிமைகளை ஏற்பதில்லை. சட்டரீதியான உரிமைகளை மேலும் அரசியல் உரிமைகள், பொது உரிமைகள் (Civil Rights) என்றும் குறிப்பிடுவதுண்டு.

**அரசியல் உரிமைகள்** (Political Rights)

மக்களாட்சியின் அடித்தளமாக விளங்குபவை அரசியல் உரிமைகள். இவை ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்களோடு நேரடித் தொடர்பு கொள்ள மக்களுக்கு வாய்ப்பளிக்கின்றன. அவை:

(அ) இவற்றுள் தலையாயது வாக்குரிமை ஆகும். ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ள இவ்வுரிமையைப் பயன்படுத்தித் தேர்தல்களின் வாயிலாக அரசுகள் அமைக்கப்படுகின்றன. மக்களாட்சி அரசில் மக்களனைவருக்கும் இவ்வுரிமை தரப்பட்டுள்ளது.

(ஆ) வாக்குரிமையின் அடிப்படையில் பிறப்பது தேர்தலில் போட்டியிடும் உரிமை. மக்களாட்சியில் நாட்டின் அரசை அமைப்பதற்கு வாக்குரிமை எந்த அளவிற்குத் தேவையோ அந்த அளவிற்குத் தேர்தலில் போட்டியிடவும் உரிமை தேவையே. எனவே குடிமக்கள் அனைவருக்கும் இவ்வுரிமை தரப்பட வேண்டும். ஆனால் இதை வரையறுக்கும் வகையில் சட்டதிட்டங்கள் இயற்றப்படுவதுண்டு.

(இ) அரசு அலுவலகங்களில் வேலை பெறும் உரிமையும் சிறப்பானதாகும். அரசின் உயர்ந்த பதவிக்கு எந்தக் குடிமகனும் போட்டியிடலாம். ஆண், பெண் பாகுபாடில்லாமல் சமயம், ஏழை பணக்காரன், மொழி ஆகிய பாகுபாடின்றி அனைவருக்கும் வேலைவாய்ப்பு உரிமை அரசால் வழங்கப்பட வேண்டும்.

(ஈ) மக்களாட்சியில் விண்ணப்பமிடும் உரிமையும் முக்கியமான உரிமையாகும். ஆட்சியாளர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எனவே மக்களுடைய முறையான குறைகளைத் தீர்ப்பது அரசின் கடமையாகும். அதற்கான செய்முறைகள் வகுக்கப்பட வேண்டும். குடிமக்கள் தங்களது குறைகளைத் தனித்தோ அல்லது கூட்டாகவோ விண்ணப்பிக்க உரிமையுண்டு. அதிகாரிகளும் அவற்றைப் பரிவோடு பார்த்து குறைகளைத் தீர்ப்பர்.

**பொது உரிமைகள்** (Civil Rights)

பொது உரிமைகள் பொன்னானவை; மதிப்பிட முடியாதவை. இவையன்றி மனிதன் முழுமையான வாழ்க்கையை நடத்த இயலாது. இன்றைய உலக நாடுகளில் ஆண், பெண் பாகுபாடின்றி சாதி, சமய நிற வேறுபாடின்றி குடிமக்களுக்கு இப்போது உரிமைகள் தரப்பட்டுள்ளன.

(அ) உயிர்வாழ் உரிமை இவற்றுள் தலையாயதாகும். பிற உரிமைகளைப் பெற்று அனுபவிக்க இது முதலில் தேவை. உயிருக்குப் பாதுகாப்பில்லையெனில் பிற உரிமைகளைப் பற்றி நினைக்கவே இடமிராது. உயிருக்குப் பாதுகாப்பளிப்பது அரசின் முதல் பணியாகும். அதைப் போல தன் உயிரை மாய்த்துக் கொள்ள ஒருவனுக்கு உரிமை இல்லை. பிறருடைய உயிரைக் கவர உரிமையில்லை. தற்காப்பு செய்து கொள்ள ஒருவனுக்கு உரிமையுண்டு.

(ஆ) தன்னுரிமை பல உரிமைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. சமய உரிமை, வழிபாட்டுரிமை, பேச்சுரிமை, கருத்து வெளியீட்டுரிமை, சங்கம் அமைக்க உரிமை, வேலை பார்க்க உரிமை ஆகியவை தன்னுரிமையில் அடங்கும். தக்க காரணமின்றி கைது செய்தல், காவலில் வைத்தல் இவற்றினின்றும் உரிமை பெறுவதும் கட்டாயம் தேவை. அரசியலில் பங்கேற்கும் உரிமையும் சிறப்பானது என்று லாஸ்கி கருதுகிறார்.

(இ) கல்வி கற்கும் உரிமையும் இன்றைய உலகில் சிறப்புத் தேவையாக உள்ளது.

(ஈ) சொத்துரிமை என்பது ஒருவருக்கு உள்ள உரிமை என்பதோடு பிறருக்கு அன்பளிப்பாக வழங்கவும் பின்வரும் சந்ததியினருக்கு விட்டுச் செல்லவும் உரிமை உண்டென்பதை இது வலியுறுத்தும். இரஷ்யா, சீனா போன்ற நாடுகளைத் தவிர இன்று பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் குடிமக்களுக்கு சொத்துரிமை உள்ளது.

(உ) ஒப்பந்த உரிமையின்படி ஒருவருக்கொருவர் தம்மிடையே ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். இவ்வொப்பந்தங்களின்மீது எழும் உரிமைகளையும், கடமைகளையும் செயல்படுத்துவது அரசின் பொறுப்பாகும். மக்கள் நலனுக்கு முரணாக எத்தகைய ஒப்பந்தங்களையும் செய்து கொள்ள அரசு அனுமதிக்காது. எடுத்துக்காட்டாக, நமது நாட்டில் கொத்தடிமை முறை தடை செய்யப்பட்டுள்ளது.

(ஊ) குடிமக்கள் அனைவருக்கும் சமய வழிபாட்டுரிமை உண்டு. சமயச் சடங்குகளை நடத்தவும் விழாக்களைக் கொண்டாடவும் உரிமையுண்டு. இந்திய அரசியலமைப்பின் 25ஆம் உட்பிரிவு சமய உரிமையைத் தந்துள்ளது.

(எ) சாக்ரடீஸ் தன் உயிரினும் மேம்பட்டதாகக் கருத்து வெளியிட்டு உரிமையைப் பேணினார். இது மக்களாட்சியின் முக்கியமான அடிப்படையாகும். பேச்சுரிமை, அச்சிடும் உரிமை ஆகியவை இதில் அடங்கும்.

(ஏ) இன்றைய மக்களாட்சியில் சங்கங்களை அமைத்துக் கொள்ள உரிமையுண்டு. தனித்து தன்னைத் தற்காத்துக் கொள்ள முடியாத மனிதன் கூட்டாக இணைந்து சங்கங்களை உருவாக்குகின்றான்.

(ஐ) சட்டத்தின் முன் அனைவருக்கும் சம உரிமை உண்டு என்ற கோட்பாடு இன்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஒ) குடிமக்களுக்குப் பொருளாதார உரிமைகளும் இன்று அடிப்படைத் தேவைகளாக உள்ளன. வேலை செய்ய உரிமை, தொழிற்சாலைகளை நடத்துவதில் உரிமை போன்ற உரிமைகள் இன்றைய தொழில்மயமான மக்களாட்சி முறையில் கேட்கப்படுகின்றன; பெறப்படுகின்றன.

## மனித உரிமைகளின் வரலாறு

### மகாசாசனம்

1215-இல் ரன்னிமேட் போர்க்களத்தில் இங்கிலாந்து மன்னர் ஜான் என்பவரைத் தோற்கடித்து இங்கிலாந்து மக்கள் பெற்ற மகாசாசனம் மனித உரிமைகளைப் பற்றிய முதல் ஆவணமாகும். அதில் மன்னர் யாரையும் காரணம் இல்லாமல் கைது செய்யக்கூடாதென்றும் முறையான விசாரணையின்றி சிறையில் அடைக்கக் கூடாதென்றும் குறிப்பிட்டிருந்தது. இங்கிலாந்து மக்கள் உரிமைகளின் மூலைக்கல்லாக இது போற்றப்படுகிறது.

### உரிமைகள் மசோதா

இங்கிலாந்து மன்னர் மூன்றாம் வில்லியம் 1689-இல் பிரிட்டிஷ் பாராளுமன்றம் சமர்ப்பித்த உரிமைகள் மசோதாவில் கையெழுத்திட்டார். இந்த மசோதா மன்னரது தனி உரிமை என்று கூறப்பட்ட சட்ட நிறுத்த அதிகாரம், சட்ட விலக்கதிகாரம், அமைதி காலத்தில் நிலைப்படை வைத்திருப்பது போன்றவை மக்கள் உரிமைக்கு ஊறுவிளைவிப்பவை. பாராளுமன்ற பேச்சுரிமையும், மக்கள் மன்னரிடம் விண்ணப்பம் செய்யும் உரிமையும் உறுதி செய்யப்பட்டது.

### அமெரிக்காவில் சுதந்திர பிரகடனம் (1776)

அமெரிக்க சுதந்திரப் பிரகடனம், "மனிதனுக்கு அவனைப் படைத்தவனால் சில உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை மன்னர் பறிக்க முடியாது" எனக் கூறியது.

### மனித உரிமை பிரகடனம்

பிரஞ்சுப் புரட்சி அரசு 1791-இல் மக்களின் உரிமைகளைத் தொகுத்து வெளியிட்டது. சுதந்திரமாகப் பிறக்கும் மனிதனின் உரிமைகளில் ஏற்றத்தாழ்வு இல்லை. தனி மனித சுதந்திரம், சொத்துரிமை, பேச்சுரிமை, சட்டத்திற்குப் புறம்பாக சிறைப்படா உரிமைகள் ஆகியவை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு என்று அறிவித்தது.

**ஐ.நா. சபையின் சாசனம்**

உலக நாடுகளின் மன்றமான ஐ.நா. சபை 24 அக்டோபர் 1945-இல் தோற்றுவிக்கப்பட்டது. அதன் சாசனம் அன்றே வெளியிடப்பட்டது. அதில் மனித உரிமைகளுக்கான மதிப்பையும் அடிப்படையான சுதந்திரங்களையும் காப்பது ஐ.நா. சபையின் நோக்கங்களுள் ஒன்று எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**உலக மனித உரிமைப் பிரகடனம் (1948 டிசம்பர் 10)**

ஐ.நா. சாசனத்தின் 62-ஆம் பிரிவு மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வழிமுறைகளைப் பரிந்துரை செய்ய அதிகாரமளித்துள்ளது. அதன்படி, 1948 டிசம்பர் 10-ஆம் நாள் ஐ.நா. பொதுச்சபை உலகளாவிய மனித உரிமை பிரகடனத்தை வெளியிட்டது. அது வெளியிடப்பட்ட டிசம்பர் 10ஆம் நாளை மனித உரிமை தினமாக உலகநாடுகள் கொண்டாட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தது. அத்துடன் 1968ஆம் ஆண்டை மனித உரிமைகள் ஆண்டாக அறிவித்தது. அந்தப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளவை:

1. எவ்விதப் பாகுபாடுமின்றி அனைத்து மக்களுக்கும் உரிமைகள் வழங்கப்படவேண்டும்.
2. ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர் வாழவும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் உரிமை உண்டு.
3. அடிமைத்தனமும் அடிமை வாணிபமும் ஒழிக்கப்படவேண்டும்.
4. சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
5. உரிமைகள் பாதிக்கப்பட்டால் நீதிமன்றம் செல்லும் உரிமை.
6. நீதிமன்றம்தான் ஒருவனை குற்றவாளி என்று கூறவேண்டும்.
7. குற்றம் சுமத்தப்பட்டவன், தான் நிரபராதி என்பதை நிரூபிக்க அனைத்து வாய்ப்புகளும் அளிக்கப்பட வேண்டும்.

8. சுதந்திரமாக பயணம் செய்யும் உரிமை, வெளிநாடுகளுக்கு செல்லும் உரிமை.

9. பிற நாட்டில் அரசியல் தஞ்சம் பெறும் உரிமை.

10. விரும்பியவண்ணம் திருமணம் செய்துகொள்ளும் உரிமை.

11. சொத்துரிமை, சமய உரிமை, கருத்துகளைச் சுதந்திரமாக வெளியிடும் உரிமை.

12. அமைதியாகக் கூட்டம் கூடும் உரிமை.

13. தேர்தல்களில் பங்கு பெறும் உரிமை.

14. ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு உரிமை.

15. கலாச்சார உரிமை.

1966ஆம் ஆண்டு, உலக மனித உரிமைப் பிரகடனத்தில் விடுபட்ட உரிமைகளைக் குறிப்பிட்டு அவற்றை காத்து நடைமுறைப் படுத்துவதற்கு அரசுகள் வற்புறுத்தும் வகையில் இரு உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. அவை,

1. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய பன்னாட்டு உடன்படிக்கை (International Covenant on Civil and Political Rights).

2. பொருளியல் சமூகப் பண்பாட்டு பன்னாட்டு உடன்படிக்கை (International Convenant on Economic, Social and Cultural Rights).

இவற்றைத் தவிர ஐ.நா. சபையின் ஒரு கிளையான பொருளாதார சமூக சபை மனித உரிமைகள் ஆணையத்தை நிறுவியது. இந்த ஆணையம் உலகில் எந்த நாட்டிலாவது மனித உரிமைகள் மீறப்பட்டால் அதைப்பற்றி விவாதித்து நடவடிக்கை எடுக்க பொதுச் சபையைக் கூட்டுகிறது. சான்றாக தென்னாப்பிரிக்கா அரசு மனித உரிமைகளுக்கெதிரான இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடித்ததைக் கண்டித்து அந்நாட்டின்மீது பொருளாதார முற்றுகை விதிக்கவேண்டும் என பரிந்துரை செய்தது.

**பன்னாட்டு பொது மன்னிப்பு நிறுவனம்**
(Amnesty International)

1961-இல் பிரிட்டன் வழக்கறிஞர் பீட்டர் பொன்சன் என்பார் பன்னாட்டு பொது மன்னிப்பு நிறுவனத்தை அமைத்தார். ஐ.நா. சபை போன்ற பல பன்னாட்டு அமைப்புகளுடன் தொடர்பு கொண்ட இந்நிறுவனம் எந்த அரசின் சார்பும் இன்றி சுதந்திரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. பல்வேறு நாட்டுச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் உரிமைக்காக வாதாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பல்வேறு நாடுகளில் ஆட்சிபுரியும் சர்வாதிகாரிகள் அரசியல் தலைவர்களை விசாரணையின்றி சிறையில் அடைத்தனர். சான்றாக நைஜீரியாவின் சர்வாதிகாரி அபாச்சா, அந்நாட்டில் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவரை பதவி நீக்கி சிறையிலடைத்தார். அதைப்போல மியான்மரில் ஆட்சிபுரிந்த இராணுவ அரசு சுகியூ ஆங்கான் என்பவரை வீட்டுக்காவலில் வைத்தது. தென்னாப்பிரிக்கா குடியரசு தலைவராக இருந்த நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகள் சிறையில் வாடினார். இவ்வாறு அரசியல் காரணங்களுக்காக சிறையில் வாடும் தலைவர்களை விடுவிக்க இந்த நிறுவனம் முயற்சி மேற்கொள்கிறது. இதன் தலைமையகம் இலண்டன்.

**இந்தியாவில் மனித உரிமை**

ஜனநாயக நாடுகளில் ஜனநாயக மரபிற்கு ஏற்ப சில அடிப்படை உரிமைகள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். இவ்வுரிமைகளை அரசு மீறாமல் இருத்தல் வேண்டும். இவ்வுரிமைகளுக்கான உத்தரவாதத்தை அரசு மக்களுக்கு வழங்கவேண்டும். எனவே, பொதுவாக ஜனநாயக நாடுகளில் இவ்வுரிமைகள் அரசியலமைப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஜனநாயக தத்துவத்தைக் கடைப்பிடிக்கும் இந்தியாவில் இவ்வுரிமைகள் அரசியலமைப்பில் வகுத்தளிக்கப்பட்டுள்ளன. இந்திய அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள உரிமைகளை ஆறு தலைப்பின்கீழ் வகைப்படுத்தி வழங்கலாம். 1) சமத்துவத்திற்கான உரிமை

2) சுதந்திரத்திற்கான உரிமை 3) சுரண்டலுக்கு எதிரான உரிமை 4) சமய சுதந்திரத்திற்கான உரிமை 5) கலாச்சார மற்றும் கல்வி உரிமை 6) அரசியலமைப்பு பரிகாரத்திற்கான உரிமை என்பவையாகும்.

**1) சமத்துவத்திற்கான உரிமை**

சமத்துவத்திற்கான உரிமையில் பல அடிப்படை இயல்புகள் காணப்படுகின்றன. அவை பின் வருமாறு:

**அ) சட்டத்தின் முன் சமத்துவம்**

இந்திய அரசு இந்திய குடிமக்கள் அனைவரையும் சட்டத்தின் முன் சமமாக பாவிக்க வேண்டும். எந்தவித பாகுபாடும் காட்டுதல் கூடாது.

**ஆ) பாகுபாட்டிற்கு எதிராக தடைவிதித்தல்**

மதம், இனம், பால், பிறப்பிடம் போன்றவற்றின் அடிப்படையில் குடிமக்களுக்கிடையே எவ்வித பாகுபாட்டையும் அரசு கொண்டு வரக் கூடாது.

**இ) பொதுப்பணிகளுக்கு சமவாய்ப்பு வழங்குதல்**

அரசுப் பணிகளைப் பெறுவதில் எவ்வித பாகுபாடும் அரசு காட்டுதல் கூடாது. பால், இனம், மதம், பிறப்பிடம் போன்றவற்றின் அடிப்படையில் அரசுப் பணிகள் வழங்குவதில் சலுகைகள் காட்டக் கூடாது.

**ஈ) தீண்டாமையை ஒழித்தல்**

நாட்டில் தீண்டாமை முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது. தீண்டாமையைக் கடைப்பிடிப்போர் சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்கப்படுவர்.

**உ) பட்டங்களை ஒழித்தல்**

இராணுவ மற்றும் கல்விப் பட்டங்களைத் தவிர ஏனைய பட்டங்களை குடிமக்களுக்கு வழங்குதல் கூடாது. குடிமக்கள் வெளிநாட்டினரிடமிருந்து பட்டங்களைப் பெறுதல் கூடாது.

## 2) சுதந்திரத்திற்கான உரிமைகள்

எல்லா குடிமக்களுக்கும் பின்வரும் சுதந்திர உரிமை வழங்கப்படல் வேண்டும். பேச்சுரிமையும் வெளியிடும் உரிமையும் அளிக்கப்பட வேண்டும். ஆயுதமின்றி சமாதானமாய் கூடும் உரிமை வழங்கப்படல் வேண்டும். சங்கங்கள் அமைக்கும் உரிமை கொடுக்கப்பட வேண்டும். இந்திய நாட்டில் எல்லா இடங்களிலும் கட்டுப்பாடின்றி சென்று வரும் சுதந்திரம் குடிமக்களுக்கு கொடுக்கப்படல் வேண்டும். இந்தியாவில் குடிமக்கள் விரும்பும் எப்பகுதியிலும் குடியேறலாம். எத்தொழிலை ஆரம்பிக்கும் உரிமையும் அரசியலமைப்பின் அடிப்படையில் வழங்கப்படல் வேண்டும்.

குற்றத்தை மீறியதை நிரூபிக்காமல் யாரையும் தண்டிக்க இயலாது. ஒரே குற்றத்திற்காக ஒருவரை ஒரு தடவைக்கு மேல் தண்டிக்கக்கூடாது. சட்டத்தின் அடிப்படை இன்றி யாருடைய உரிமையையும் உயிரையும் பறிக்க இயலாது. காரணத்தை தெரியப்படுத்தாமல் யாரையும் கைது செய்து காவலில் வைத்தல் கூடாது. காவலில் வைக்கப்பட்டவர்கள் தமக்காக வழக்காடும் வழக்குரைஞர்களை நியமனம் செய்து கொள்ள உரிமை பெற்றுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் படுத்தப்பட வேண்டும். மாஜிஸ்டிரேட்டின் ஆணையின்றி காவலில் வைத்தல் கூடாது.

## 3) சுரண்டலுக்கு எதிரான உரிமை

இந்திய அரசியல் அமைப்பு மனிதர்களை தவறான முறைகளில் பயன்படுத்துதலைத் தடை செய்கிறது. பிச்சை எடுத்தல் போன்ற செயல்களை கட்டாயமாக மனிதர்கள் மீது திணித்தல் கூடாது. அவ்வாறு திணிப்போர் மீது சட்டத்தின் வாயிலாக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மேலும் பதினான்கு வயதிற்குக் குறைந்தவர்களை (குழந்தைகளை) தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும் பணியில் அமர்த்துதல் கூடாது.

**4) சமய சுதந்திரத்திற்கான உரிமை**

இந்திய அரசியலமைப்பின் அடிப்படையில் இந்திய குடிமக்களுக்கு முழு மத சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. யாரும் எந்த மதத்தையும் பின்பற்றவும் பிரச்சாரம் செய்யவும் உரிமை பெற்றுத் திகழ்கின்றனர். ஒவ்வொரு சமயப் பிரிவும் தன் சமய மற்றும் தர்மப் பணிகளுக்கான நிறுவனங்களை நிறுவி செயல்படுத்தும் உரிமை பெற்றுள்ளது. ஒவ்வொரு மதமும் தனது காரியங்களை நிர்வகிக்கும் உரிமை பெற்றுள்ளது. மேலும் சட்டத்தின் அடிப்படையில் அசையும் அசையா சொத்துக்களை ஒவ்வொரு மதமும் சொந்தமாக்கி நிர்வகிக்கும் உரிமையைப் பெற்றுள்ளது. மதத்தின் அடிப்படையில் குடிமக்கள் மீது வரிவிதிப்பது தடை செய்யப்படுகிறது. அரசிடமிருந்து நிதி உதவி பெறும் கல்வி நிலையங்களில் மத போதனைகள் செய்தல் தடை செய்யப்படுகிறது.

**5) கலாச்சார மற்றும் கல்வி உரிமை**

இந்தியாவிலுள்ள பல்வேறு மக்கள் பிரிவுகளும் தமது மொழியையும் எழுத்துக்களையும் கலாச்சாரத்தையும் பாதுகாத்து வளர்க்கும் உரிமை பெற்றுள்ளன. மேலும் சிறுபான்மை சமூகத்தினர் கல்வி நிலையங்களை அமைத்து நிர்வகிக்கும் உரிமையைப் பெற்றுள்ளனர்.

**6) அரசியலமைப்பு பரிகாரத்திற்கான உரிமை**

இந்திய குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் மீறப்படுமாயின் இழந்த உரிமையை மீண்டும் பெற தலைமை உயர்நீதிமன்றத்திடம் சட்டரீதியாய் முறையிடும் உரிமையை மக்கள் பெற்றுள்ளனர். அந்நேரங்களில் நீதிமன்றம் நீதிப்பேராணைகளைப் பிறப்பித்து மக்களுடைய உரிமைகளை மீட்டு வழங்குகிறது.

# 1

## மனித உரிமைகள் - பொருள் விளக்கம்

### (Human Rights - Definition)

**முன்னுரை**

மனிதன் மனிதனாக நடக்க மனிதன் மனிதனுக்காக உருவாக்கிக் கொண்ட விதிமுறைகளே மனித உரிமைகள். மனிதன் சுதந்திரமாக வாழ்ந்து தன்னுடைய நல்வாழ்வுக்கான தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் வழிவகைகளே மனித உரிமைகள். பிறப்பு, காலம், சூழல், இடம், தேவை ஆகிய நோக்குகளில் மனிதனை இயங்கச் செய்யும் அடிப்படைக் கூறுகளே மனித உரிமைகள். சுதந்திரமாகப் பிறந்த மனிதன், சமூகம், சமயம், அரசியல் போன்றவற்றால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளான். அவனுடைய இயல்பான, இயற்கையான உரிமைகள் தடை செய்யப்பட்டு அவனது ஆளுமைப் பண்புகள் திசை திருப்பப்படுகின்றன. எனவே தன்னைப் பாதுகாத்து தன்னுடைய வாழ்க்கை மற்றும் சமுதாயக் கடமைகளை ஆற்ற யாராலும், எப்போதும், எதற்காகவும் கட்டுப்படுத்தப்பட முடியாத உரிமைகள் அவனுக்குத் தேவை. மனிதனுக்கு உண்ணவும், உறங்கவும், சிரிக்கவும், அழவும் உரிமைகளை இயற்கை தந்துள்ளது. ஆனால் காலப்போக்கில் சமூக உணர்வு காரணமாகக் கூடி வாழத் தலைப்பட்டான். அதனால் தன்னுடைய இயற்கை உரிமைகளை தன்னையொத்த பிற மனிதர்களின் நலனுக்காக விட்டுத்தர

வேண்டியவனானான். அதனால் அவனுடைய இயற்கை உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டன. அதைப்போன்றே சமூகத்தில் அரசியல் பண்புகள் மேலோங்கியபோது விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற தன்மைகள் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டன. அப்போது "சுதந்திரம் எனது பிறப்புரிமை அதனை அடைந்தே தீருவேன்" என்ற வேட்கையால் உந்தப்பட்டான். அத்தகைய உந்துதல்கள் அரசியல் உரிமைகளுக்கு அடிப்படையாயின. அதைப்போன்று முதலாளித்துவம், பொதுவுடைமை, சமதர்மம் போன்ற கோட்பாடுகள் வலுப்பெற்றன. அவை பொருளாதாரச் சுரண்டல்கள், ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு, வேலையின்மை போன்ற சமூகச் சிக்கல்களுக்கு வழிவகுத்தன. அத்தகைய இடர்களிலிருந்து தம்மைக் காத்துக் கொண்டு எண்ணியவற்றை எண்ணியவாறு பெற்று இனிய, மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ மனித உரிமைகள் தேவைப்படுகின்றன. எனவே சமூக உரிமை, அரசியல் உரிமை, பொருளாதார உரிமை, வாழ்வியல் உரிமை, பண்பாட்டு உரிமை ஆகியன விரிவான மனித உரிமைகளாக இன்று பகுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மனித உரிமைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன் அவற்றின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் தெரிந்து கொள்ளல் தலையாயதாகும்.

## வரலாற்றுப் பணிகள்

பண்டைய காலத்தில் மனித உரிமைகளைப் பற்றி விளக்கமாக மனிதன் உணர்ந்திருக்கவில்லை. அவன் எவ்விதமான கட்டுப்பாடுமின்றித் தன்னிச்சையான செயல்களைச் செய்தான். இயற்கை நல்கிய உரிமைகளை அவன் சமய நோக்கில் கடவுளுக்குப் பயந்து மேற்கொண்டிருந்தான். அவை தர்மம், நீதி என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அறநெறி சார்ந்த வாழ்க்கைக்கு அடித்தளமாயிருந்தன. வன்முறை, ஹிம்சை (தொல்லை) போன்றவற்றின் தாக்கங்களில்லாத சமூகத்தை உருவாக்க சமூக உரிமைகள் தேவையாயின. கிரேக்க அறிஞர் சாக்ரடீஸ், அவருடைய மாணவர்

பிளேட்டோ அவருடைய மாணவர் அரிஸ்டாடில் போன்றோர் காரணகாரிய நோக்கில் மனிதனின் உரிமைகள் மனிதனுக்காக ஏற்பட்ட சட்டங்களைப் பற்றிக் கூறினர். இந்தியாவில் அர்த்தசாஸ்திரம் என்ற நூலின் ஆசிரியரான கௌடில்யர் என்ற கணக்கியர் கடமை நோக்கில் உரிமைகளை மறைமுகமாக உணர்த்தினார். புனித பைபிள், புனித குரான் ஆகிய சமய சாஸ்திரங்கள் மனித உரிமைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. அன்பு, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய நோக்குகளில் நீதியடிப்படையில் ரோமானியச் சட்டங்கள் எழுந்து உரிமைகளையும் கடமைகளையும் வெளியிட்டன. ஹாப்ஸ், லாக், ரூஸோ ஆகியோர் சமுதாயத்தில் மனிதர்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட இயற்கைநிலை மற்றும் உருவாக்கப்பட்ட ஒப்பந்தங்களின் வாயிலாக உரிமைகளைச் சுட்டிக் காட்டினர். இங்கிலாந்து நாட்டில் நிலவும் சட்டத்தின் ஆட்சி, பிரான்சு நாட்டின் ஆட்சித்துறைச் சட்டம் ஆகியன உரிமைகள் பற்றிக் கூறுபவை. மகாத்மா காந்தியடிகள், மார்ட்டின் லூதர்கிங், நெல்சன் மண்டேலா ஆகியோர் பின்தங்கிய, ஒதுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக போராடினர். மியான்மர் நாட்டில் ஆங்சான்சூகி மனித உரிமைகளைப் பற்றி வலியுறுத்தினார்.

பொருளியல், அரசியல், சமூக, பண்பாட்டு அடிப்படைகளில் மனித உரிமைகள் விரிவாக்கம் பெற்று உலக சகோதரத்துவம் என்ற நோக்கில் மனித உரிமைகள் தத்துவம் உலகளாவிய கோட்பாடாயிற்று. 1946-இல் ஐக்கிய நாட்டவையானது திருமதி. எலியினார் ரூஸ்வெல்ட் தலைமையில் மனித உரிமைகள் ஆணையத்தை உருவாக்கியது. பன்னாட்டு உரிமை, மனித உரிமைகள் பற்றிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளல் போன்ற உரிமைகளைச் சுட்டிக் காட்டியது. 1948-இல் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் "உலக மக்கள் அனைவருக்கும் சுதந்திரம், நீதி, அமைதி ஆகியவற்றை நல்க அடிப்படையாக விளங்குவது அவர்களிடமிருந்து விலக்க முடியாத உரிமைகளே" என்ற தொடக்க உரையுடன் ஒரு முகவுரை மற்றும்

30 பிரிவுகளுடன் வெளியிடப்பட்டது. 1977-இல் 18 பேர்களடங்கிய மனித உரிமைகள் குழு உருவாயிற்று. இன்று பன்னாட்டவையில் நிறவெறிக்கு எதிரான குழு, சிறுபான்மையின் பாதுகாப்புக் குழு, சித்திரவதை தடுப்புக் குழு போன்ற சிறப்பு அமைப்புகள் மனித உரிமைகளை பலநிலைகளிலும் பாதுகாக்க அமைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவைப் பொறுத்தவரை 1950-இன் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்திய குடிமக்களின் அடிப்படை உரிமைகள் பற்றிக் குறிப்பிட்டது. 1993-இல் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு 1993 செப்டம்பர் 23 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்திய அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தின் 12ஆம் விதி முதல் 35 முடிய உள்ள 14 பிரிவுகள் அடிப்படை உரிமைகளைச் சுட்டிக்காட்டுகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ளவற்றைப் பற்றித் தனித்தனியாகப் பின்வரும் பகுதிகளில் காணலாம். ஆனால் அதற்குமுன் மனித உரிமைகள் என்றால் என்னவென்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**பொருள் விளக்கம்**

மனித உரிமைகள் என்பன தனி மனிதனின் உரிமைகளாகும் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டவை. பலதரப்பட்ட கட்டுப்பாடுகள் சுரண்டல்கள் ஆகியவற்றிலிருந்து ஒருவரைக் காத்துக்கொள்ள உதவுபவை உரிமைகளாகும். தமது தேவைகளை பிறருக்கு எவ்விதமா இன்னல்களும் இல்லாமல் நிறைவு செய்யத் துணை நிற்பன உரிமைகள் கருத்துக் கூறுதல், பேச்சுரிமை, எழுத்துரிமை, சொத்துரிமை எ பலதரப்பட்ட உரிமைகள் மனிதனுக்கு உரியவையாக உள்ளன. எனவே விருப்பங்கள், எண்ணங்கள் என்ற அடிப்படைகளுடன் மனிதன் மாண்பு வாழ உரிமைகள் முக்கியமானவை. மனித உரிமைகள் காலம், இட தேவை ஆகியவற்றிற்கேற்ப மாறக்கூடியவை. இயற்கையாக

பெறப்பட்டவை. மாற்றியமைக்க முடியாதவை. அவற்றை உள்ளார்ந்த மனிதப் பண்புகள் எனக் கொள்ளலாம். அனைத்து மக்களும் அனுபவிக்க வேண்டியவை உரிமைகள். ஒரு சிலர் மட்டும் அதனைப் பெறுதல் என்பது சமூகச் சிக்கலுக்கு வழிகோலும். உரிமைகள் சமூகத்தின் உறுப்பான ஒவ்வொரு மனிதனாலும் ஏற்கப்பட்டு சமூகம், சமூகத்தை நடத்திச் செல்லும் அரசு ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டவை. சுதந்திரமாக, மதிப்புடன், தேவை நிறைவுகளுடன் மனிதன் வாழ வகை செய்யும் ஒரு நெறிமுறைதான் உரிமைகள்.

இனி உரிமைகளை எவ்வாறு பல அறிஞர்கள் விளக்குகின்றனர் என்பதைக் காணலாம். மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் உரிமைகள் பொதுவானவை. அதன் பொருளை உணர்ந்தால் அதன் பண்புகளையும் உணரலாம்.

**போசாங்கே,** உரிமைகளை, சமுதாயத்தால் ஏற்கப்பட்டு நாடால் அல்லது அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டவை எனப் பகர்ந்துள்ளார்.

**ஆலன்,** உரிமைகளை சட்ட பூர்வமாக அங்கீகாரம் தரப்பட்டுள்ள மனிதன் நலன்களை எட்டுவதற்காகத் தரப்பட்ட அதிகாரம் என வரையறுக்கின்றார்.

**எர்னெஸ்ட் பார்கர்,** ஒவ்வொருவரும் பெற்றுள்ள உரிமைகள் அனைத்தும் சட்டத்தால் பாதுகாக்கப்பட்டவை என்கிறார்.

**ஹாலண்ட்,** உரிமைதனை, ஒரு அரசின் ஒப்புதல், உதவியுடன் பிறர் மீது கட்டுப்பாடுகளை விதிக்க மனிதர்களிடமுள்ள பண்பு என்று விவரிக்கின்றார்.

**ஹோல்ம்ஸ்,** உரிமை என்பது சில இயல்பான அதிகாரங்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தரப்பட்ட அனுமதி எனவும், சில வேளைகளில் ஒருவர் குறிப்பிட்ட செயலைச் செய்வதற்கான பாதுகாப்பு எனவும் இழப்பிற்கான நிவாரணமாக விளங்குவது எனவும் கூறுகிறார்.

சால்மண்ட் என்பவர் அதைச் சட்டம் மூலம் பாதுகாக்கப்பட வேண்டிய நலன் என்றும், அதைப் போற்றிக் காக்க வேண்டியது மனிதனின் கடமை என்றும் கூறுகின்றார்.

ஹாப்ஹவுஸ், உரிமைகள் என்பன நாம் மற்றவர்களிடமிருந்து எதை எதிர்பார்க்கிறோமோ அதையே மற்றவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கும் தேவைகள் என்று விவரிக்கின்றார்.

டாக் ஹேமர் ஷீல்ட், மனித உரிமைத் தத்துவம் என்பது அச்சத்திலிருந்து விடுபடுதலே என்று வர்ணிக்கின்றார்.

பல்கிவாலா, சுதந்திரம் என்பதே மனித உரிமைகள் என்று கூறுகின்றார்.

சைரஸ்வான் என்பார் மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம், கல்வி, ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளே உரிமை என்கிறார்.

எட்மண்ட்பர்க், இறைவனின் வரையறைகளுக்கொப்ப அரசு, சட்டத்தின் மூலம் மனிதர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்ட வரையறைகளே உரிமை எனவும் அதன் மூலம் மக்கள் நியாயமான தேவைகளைப் பெற்றுக் கொள்கின்றனர் எனவும் உரைக்கின்றார்.

ஜெர்மி பென்தாம் என்ற பயனீட்டுவாதி சுதந்திரமாக வாழ இயற்கை நல்கியுள்ள உத்தரவாதங்களே உரிமைகள் என்கிறார். அவை சட்டபூர்வமானவையாகும்.

ஜான் ஸ்டுவர்ட் மில் என்னும் பொருளியல்வாதி, தன் மனிதர்களின் மகிழ்வுக்காக நிரந்தரமாக மேற்கொள்ளப்படும் பொருளாதார அரசியல் செயல்களே உரிமைகள் என்கிறார்.

லாஸ்கி என்பவர், சட்டபூர்வமான உரிமைகள் என்பவை அரசானது மக்களின் நல்வாழ்வுக்காகவும், அத்தியாவசிய தேவைகளுக்காகவும் அளிக்கப்படுபவை என்கிறார்.

மேலே கூறப்பட்டுள்ளவற்றின் வாயிலாக, மனிதனின் வாழ்க்கை தங்குதடையின்றி நடைபெற சமூகம் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட செயல்களே உரிமைகள் என அறியலாம். அது மக்களின் பாதுகாப்புக் கேடயம் என்றாலும் மிகையாகாது. அதனால்தான் 1993-ஆம் ஆண்டின் வியன்னா பிரகடனம், "மனிதனின் மதிப்பு, கண்ணியம் ஆகியவற்றின் வெளிப்பாடுகளே உரிமைகள்" எனப் பகர்ந்துள்ளது. இதனை டி.டி. பாசு என்பவர் சுதந்திரமாகப் பிறந்த மக்கள் அனைவருக்கும் முழுமையாகச் செயல்பட உதவுவனவே மனித உரிமைகள் என்கிறார். மனிதனின் தேவைகளை அங்கீகரிக்கையில் அவை மனிதனின் செயல்கள் மற்றும் கடமைகளை ஆற்றத் துணைபுரிகின்றன. இன்று மனித உரிமைகள் விரிவாக்கம் பெற்றுள்ளன. 1978-இல் அமெரிக்கா, உரிமைகளைப் பற்றிக் கூறுகையில், தன்னை முறையற்ற செயல்கள் மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வது மனித உரிமை எனக் குறிப்பிட்டுள்ளது. எனவே மனித உரிமைகள் மனிதனின் ஆளுமை மற்றும் மகிழ்ச்சிக்கு உட்பட்டவை. மனிதகுல மேம்பாட்டுக்கு மனித உரிமைகள் முக்கியமானவை. உரிமைகள், மனித வாழ்க்கை நடைமுறைகளில் சிறப்பிடம் பெற்றுள்ளன. சமுதாயத்துக்கும் அரசுக்கும் உரிமைகளைப் பாதுகாப்பது அடிப்படைக் கடமையாகும்.

- - -

# 2

## மனித உரிமைகள் - இயல்பும் தன்மைகளும்
## (Human Rights - Nature Scope)

மனிதன் மனிதனாக வாழ இயற்கை, சமுதாயம், அரசு, சட்டங்கள் ஆகியவை நல்கியுள்ள சிறப்பான உரிமைகளே மனித உரிமைகள். தனிமனிதன் மனிதனாக அன்றி விலங்காகச் செயல்பட்ட நிலையில், சுதந்திரமாக, எவ்விதமான கட்டுப்பாடும் இல்லாமல் வாழ்ந்தான். அவன் உரிமைகளைப் பற்றிச் சிந்திக்கவில்லை. கால ஓட்டத்தில் குழு, சமுதாய, அரசியல், பொருளியல் மற்றும் பண்பாட்டு உணர்வுகள் படிப்படியாக மேலோங்கிய போது மனிதன் கட்டுபாடற்ற சுதந்திரமான வாழ்க்கையை விரும்பினான். அத்தகைய செயல்கள் உரிமைகள் எனப்பட்டன. அவை தனிமனிதன் மற்றும் சமூகம் வெளியிடும் அறிவிப்புகள் மறறும் கோரிக்கைகள் ஆகும். உரிமைகள் அனைவருக்கும் பொதுவானவை. உரிமைகள் சமுதாயம், அரசு, சட்டம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட வேண்டும். உரிமைகளால் மட்டுமே மனிதன் தன்னுடைய முறையான, பிறரைப் பாதிக்காத, அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தேவைகளை நிறைவு செய்து கொள்கிறான். உரிமைகள் மதிப்பும், மாண்பும் உடையவையாதலால் சமுதாய மற்றும் தனிநபர்களின் மேம்பாட்டிற்கான அடிப்படைகளாக அமைகின்றன. பொதுவானவையாக அவை இல்லாவிடில் அவற்றை சலுகைகள் எனலாம்.

சமூகப் பண்பாட்டு வளர்ச்சியால், மனிதன் உலக சமுதாயத்தின் உறுப்பு என்ற நிலையை எட்டுகையில் அவன் பொதுநல நோக்கில் உரிமைகளைப் பகிர்ந்து கொள்கிறான். இன்றைய நிலையில் தனி

மனிதனின் தன்மைகள், அவனுடைய பண்புகள், சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளால் மட்டுமல்லாமல் அவனுடைய ஆளுமைப் பண்பு மற்றும் உரிமைகள் மூலம் அளவிடப்படுகின்றன. மனித ஏக்கம் மறைந்து மனிதநேயப் பண்புகள் மலர அவனுடைய உரிமைகள் போற்றிக் காக்கப்பட வேண்டும். தனிமனிதர்கள் சட்டத்தின் வாயிலாகத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வகை செய்வதே ஒரு உரிமை. ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய புகழ், பெருமை, குடும்பம் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்ள பயன்படுவது சமூகமும் அரசும் அவனுக்களித்துள்ள உரிமைகளாகும். தனிமனிதன் தன்னையொத்த பிற மனிதர்களுடன் எவ்வித வேறுபாடும் காட்டாமல் சகிப்புத் தன்மையுடன் செயல்பட்டால் அம்மனிதன் தன்னுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள இயலும். இனம், மதம், மொழி, நிறம் போன்றவற்றின் மூலம் ஒருசாரார் மற்றொரு சாராரை ஒடுக்குவது அல்லது ஒதுக்குவது நீக்கப்பட்டு உரிமைகள் அனைவருக்கும் பொதுவானவையாக ஆக்கப்பட வேண்டும். வார்த்தைகளாலோ, எழுத்துக்களாலோ ஒருவர் மற்றவரைப் பழித்துரைப்பதும் சிறுமைப்படுத்துவதும் சட்டபூர்வமாகத் தடுக்கப்பட வேண்டிய உரிமைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. மனிதர்களிடையே அன்பைப் பகிர்ந்து கொள்ள உதவுவதே உரிமைகளாகும். இந்திய அரசியலமைப்பின்படி ஒரு அரசு, தன்னுடைய நாட்டு மக்களை சமயம், இனம், பால், நிறம், சாதி, பிறப்பிடம் ஆகிய நோக்குகளில் வேறுபடுத்திப் பார்க்காமல் எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம் என்ற நோக்கில் காண்பது உரிமை சார்புடையதாகும். இத்தகைய உரிமைகளை உலக மக்கள் வேறுபாடின்றிப் பயன்படுத்த வகை செய்வது, ஐக்கிய நாட்டவையின் அனைத்து உறுப்பு நாடுகளின் கடமையாகும்.

உயிர் வாழ்தல் என்பது அனைத்து மனிதர்களின் அடிப்படையான, இயல்பான உரிமை. இதனை சட்டங்கள் பாதுகாத்தல் வேண்டும். உலகின் எப்பகுதியில் இனப்படுகொலை நிகழ்ந்தாலும் அது மனித உரிமை மீறலாகும். எனவே அதை நீக்கும் உரிமை அரசுக்கு உண்டு. தனிமனிதன் தன்னை எவ்விதமான சுரண்டல்களிடமிருந்தும் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை உடையவன். பொருளியல் நோக்கில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை அவனுக்கு உண்டு.

அறிவாற்றல் பெருக்கத்தால் பொருளாதாரத்தைப் பெருக்கிக்கொள்ளும் உரிமையும் உண்டு. ஐக்கிய நாட்டவையின் பூர்வீகக் குடிகளுக்கான உரிமைப் பிரகடனப்படி பூர்வீகக் குடிகளை அவர்கள் வாழுமிடத்திலிருந்து வற்புறுத்தி இடம் பெயரச் சொல்லும் உரிமை யாருக்கும் இல்லை. 1950ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 39 (ஈ) ஆனது ஆண் பெண் இருபாலாருக்கும் ஒத்த வேலைக்கு ஒத்த ஊதியம் உண்டு என்ற உரிமையை நல்கியுள்ளது. இதன் மூலம் உரிமைகள் பலதரப்பட்டவை என்பது புலனாகின்றது. அத்துடன் ஆண், பெண் என்ற இருபாலருக்கும் சம உரிமையுண்டு என்பதும் தெளிவு.

இந்தியக் குடிமக்கள் தமது மொழி, சமயம், எழுத்து, கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் உரிமையுடையவர்கள். இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி இந்தியர்களனைவருக்கும் சுதந்திரமாகச் சிந்திக்க, பேச, அமைதியாகக் கூட, சங்கங்கள் அமைக்க இந்தியப் பகுதிக்குள் தங்கு தடையின்றி நடமாட, குடியிருக்க, குடியமர, விரும்பிய தொழிலைச் செய்ய உரிமை உண்டு. குழந்தைக்கு ஓய்வெடுக்கவும், விளையாட்டில் ஈடுபடவும் உரிமையுண்டு எனவும் கலை மற்றும் கலாச்சார வாழ்வில் சுதந்திரமாக ஈடுபட உரிமையுண்டு என்பதையும் 1998-இல் வெளியான ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான நடவடிக்கையின் பிரிவு 31.1. (இ) வலியுறுத்துகின்றது. அதே நேரம் மக்களின் உரிமைகளுக்கு உத்திரவாதம் தராத சமூகமும் அரசும் மக்களாட்சிப் பகுப்புகள் என்று ஒப்புக்கொள்ள முடியாதவை. இந்த நோக்கில் ஆகிய மனித உரிமைகள் சாசனத்தின் (1998) பிரிவு 5:2 ஆனது "கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடவும், சிறுபான்மையினர் கருத்துக்கள் மதிக்கப்படவும் உரிமையுள்ள பன்மைச் சமூகத்தில் தான் மனித உரிமைகள் மலரும்" என்று குறிப்பிடுகின்றது.

மனித உரிமைகள் பரந்து விரிந்து பலதரப்பட்ட தன்மைகளைக் கொண்டவை. வாழ்வியல், அரசியல், பொருளியல், சமூகவியல் சார்புடையவை. எவ்விதமான மாறுபாடுகளும் இல்லாமல் வேறுபாடுகள் காட்டாமல் மனித குலம் முழுமைக்கும் பொருந்துபவை. மனித உரிமைகள் இயற்கை நல்கிய இயற்கையான உரிமைகளாகும். மனித உரிமைகள் மீறப்பட்டால் அவற்றைப் பாதுகாத்துக் கொள்ள சட்டங்களும்,

நீதிமன்றங்களும் உள்ளன. மனிதர்கள் சட்டத்தின் வாயிலாக தமது உரிமை மீறல்களுக்கான நிவாரணத்தைத் தேடிக்கொள்ள இன்று வாய்ப்புகள் இருக்கின்றன. மனித உரிமைகள் கேட்டுப் பெறுதலோ, மாற்றித் தருவதோ அல்லாமல் இயல்பானவை, இயற்கையானவை, சட்டப் பாதுகாப்புடையவை, தனிமனிதர்களால் போற்றிப் பேணப்பட வேண்டியவை. யாருக்கும் எவ்வித தீங்கையும் உரிமைகள் ஏற்படுத்துவதில்லையாதலால் நேர்மையானவை மற்றும் நியாயமானவை. உரிமைகள் சட்டத்தால் வகைப்படுத்தப்பட்டு மக்களுக்குத் தரப்பட்டு நீதிமன்றங்களால் பாதுகாக்கப்படுகின்றன.

மனித உரிமைகள் காலத்தின் தேவைகளுக்கேற்ப மாறக் கூடியவை. மனிதகுலம் மாண்புடன் வாழ்வதற்கான வழிமுறைகள் பெருகும் போது உரிமைகளும் விரிவடைகின்றன. சமுதாயம் மற்றும் சமுதாயக் கோட்பாடுகள் பெருகும் போது அச்சமுதாயத்தின் உறுப்பான மனிதனின் உரிமைகளும் அதற்கேற்ப மாறுகின்றன. மனித உரிமைகளானவை, மனித நேயத்தையும், ஒழுக்கத்தையும் சார்ந்தவை. சட்டத்தால் பாதுகாக்கப்படுபவை. சமூக நலனுக்காக அதன் உறுப்பான மனிதர்களின் நன்மையைக் கருதி உருவான உரிமைகள், மனிதமேம்பாடு என்ற பொது நோக்குடையவை. மனிதனிடமிருந்து இன்று பிரிக்க முடியாத நிலையை எட்டியுள்ளன.

உலக சகோதரத்துவம், உலகளாவிய நிலைக்கான முக்கியத்துவம் ஆகிய பண்புகளால் மனித உரிமைகள் வலுப்பெற்றுள்ளன. மனித உரிமைகள் தனித்தன்மை பெற்ற மேம்பாடுடைய அம்சமாக சிறப்புப் பெற்றுள்ளன. தனிப்பட்ட நாடுகளின் அரசுகளும், ஐக்கிய நாட்டவையும், பிராந்திய அமைப்புகளும் இன்று மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகின்றன. அதற்குக் காரணம் மனிதாபிமான நோக்கிலான மனித உரிமைகள் மனித குலத்தின் அடிப்படையாகவும் பாதுகாப்பாகவும் விளங்குவதேயாகும். அரசியல் பண்புகளும், பொருளாதாரப் பண்புகளும் முன்னணி நிலையில் உள்ளதால் மனித உரிமைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

- - -

# மனித உரிமைக் கோட்பாடுகள்
## (Theories of Human Rights)

ஒவ்வொரு செயலும் ஒரு தத்துவம் மற்றும் கோட்பாட்டினைக் கொண்டிருக்கும். உரிமைகள் செயல் இல்லையென்றாலும் அவையும் இவற்றைக் கொண்டுள்ளன. மனிதன் பாதுகாப்புடன் மகிழ்ச்சியாக வாழ வேண்டுமெனில் அவனுக்கென சில உரிமைகள் வேண்டும். அவை சமூக அங்கீகாரம் பெற்றவையாயிருத்தல் வேண்டும். உரிமைகள் எக்காரணங்களால் வலுப்பெற்றுள்ளன என்பது அதன் தத்துவம் சார்ந்தவை ஆகும். மனித உரிமைகள் மனிதன் தோன்றிய காலந்தொட்டு அவனுடன் பிறந்தவை. காலப்போக்கில் மனித இனம் பெருகி பல வித மாற்றங்களை அடைந்த போது உரிமைகள் திட்டவட்டமான நோக்குகளுடன் மலரலாயின. அவற்றிற்கென அடிப்படைக் கோட்பாடுகளும் தத்துவங்களும் உருவாயின. எனவே அவற்றைப் பற்றிக் காண்போம்.

### 1. இயற்கை உரிமைக் கோட்பாடு (Theory of Natural Rights)

இயற்கையின் உன்னதமான மற்றும் அற்புதப் படைப்பான மனிதன் இயல்பாகவே எண்ணற்ற ஆற்றல்களையும், உந்து சக்திகளையும், நடத்தை முறைகளையும் கொண்டவன். அதனை ஆதாரமாகக் கொண்டு எழுந்ததுதான் இயற்கை உரிமைக் கோட்பாடு என்னும் வரலாற்றுக் கோட்பாடாகும். இந்த எளிமையான கோட்பாடு

உரிமைகள் இயற்கையாகவே மனிதனுடன் இணைந்தவை என்கிறது. இயற்கை எவ்வாறு தன்னிச்சையாக மாறுபட்ட பல்வேறு தன்மைகளுடன் இயங்குகின்றதோ அதைப்போல உரிமைகளும் மனிதத்தன்மைகளுடன் இணைந்தவை. சிசரோ என்பவர் கூறியவாறு என்றும் அழியாத தொடர்நிலை உடைய மனித இனத்தின் அனைத்துக் காலங்களுக்கும் பொருந்தவல்ல உரிமைகள் கடவுளால் படைக்கப்பட்டவை. இயற்கையாக உள்ள உரிமைகள் காலத்தின் தேவைக்கேற்ப மனிதர்கள் மற்றும் அவர்களால் உருவாக்கப்பட்ட அமைப்புகளால் மாற்றங்களுக்கும் விரிநிலைக்கும் உட்படுத்தப்பட்டன. மனிதனின் கட்டுப்பாடற்ற சுதந்திரமான வாழ்க்கைக்கு இயற்கை நல்கிய அவை தர்மம், நீதி, நியாயம் போன்ற நேர்மறைப் பண்புகளின் வெளிப்பாடுகளாகும். இயற்கையானது அழிவற்றதாய் அனைத்து நாடுகளுக்கும் பொருந்தக் கூடியதாய் உள்ளதைப் போல் உரிமைகளும் அனைத்து மனிதர்களுக்கும் இயற்கை நல்கிய பேறாகும். உரிமைகளை இயற்கை உரிமை எனப் பகர்வது இக்கோட்பாடு.

மனிதன் குழுவாக இணைந்து தலைவனுக்குக் கட்டுப்பட்டு வாழத் தலைப்பட்டான். அத்தலைவன் தன்னுடைய குடிமக்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் கடமையைக் கொண்டிருந்தான். இக்கோட்பாட்டின்படி மனிதனின் பேச்சுரிமை, வாழும் உரிமை, செயலாற்றும் உரிமை போன்றவை இயற்கையாக அவன் பெற்ற கட்டுப்பாடற்ற பண்புகளாகும். பண்டைய கிரேக்கர்களும் ரோமானியர்களும் இயற்கை உரிமைகளின் பின்னணியில் தமது அரசியல் மற்றும் சமூகச் சட்டங்களை உருவாக்கினர். இயற்கைச் சட்டங்களை ஆதாரமாகக் கொண்டே இடைக்காலத்தில் மகாசாசனம் (1215), தங்க அறிவிப்பு (1222), பொது உரிமைச் சட்டம் (1283), உரிமைச் சாசனம் (1688) போன்றவை எழுந்தன. தொடர்ந்து கோட்பாடு வலுப்பெற்றது. நடைமுறை விதிகளாக இருந்த அவை, மனிதனின் பகுத்தறிவுக்கு உட்பட்டு எழுந்தவை. மனித உரிமைகள் அனைத்தும் இயற்கையாக அவன் பெற்ற உரிமைகள் சார்ந்தவை என்றே தாமஸ்பெயின் சுட்டிக் காட்டினார்.

17-ஆம் நூற்றாண்டிலிருந்து ஹாப்ஸ், லாக், ரூஸோ, குரோஸே, பூபெண்டார்ப் போன்றோர் இக்கோட்பாட்டிற்கு வலுவூட்டினர். வர்ஜீனியா உரிமைகள் பிரகடனம், அமெரிக்க சுதந்திர பிரகடனம் (1776), 1789-இல் பிரான்சில் எழுந்த மனித உரிமைகள் பிரகடனம் போன்றவை இயற்கை உரிமைகளைச் சுட்டிக் காட்டின. அமெரிக்க விடுதலைப் போர், பிரெஞ்சுப் புரட்சி, சீனப் புரட்சி, ரஷ்யப் புரட்சி போன்ற வரலாற்றுத் திருப்பங்கள் இயற்கையாக மனிதன் கொண்டிருந்த இயற்கை உரிமைகளின் காரணமாகவே எழுந்தன. ஜான் ஸ்டூவர்ட்மில் (1806-1873) என்பவரும் இயற்கை உரிமைகளின்படியே மனிதன் தனது வாழ்க்கையை நடத்திச் செல்லுதலைச் சுட்டிக்காட்டினார். இந்நிலையில் பின்னர் எழுந்த சட்டம் சார்ந்த உரிமைகள், ஏற்கனவே இருந்த இயற்கை உரிமைகளை ஆதாரமாகக் கொண்டு எழுந்தவை என்பதை மறுக்க முடியாது. தனிமனிதனைவிட சமுதாயம், சமுதாய நலன் மற்றும் மேம்பாடே முக்கியமானவை என்ற எண்ணம் மனிதனின் இயற்கைச் செயல்பாடுகளைப் பின்னணியாகக் கொண்டவை.

மனித இனத்தின் வளர்ச்சிக்கான உரிமைகளின் அடிப்படைப் பண்புகளை இக்கோட்பாடு வலியுறுத்துவதால் முக்கியத்துவம் பெற்றுள்ளது. மனிதனின் மேம்பாடு அவன் பெற்றுள்ள இயற்கையான உரிமைகளைச் சார்ந்துள்ளதால் சிறப்புடையதாகின்றது. இயற்கை உரிமைகளைப் பாதுகாக்கவே மனிதர்கள் அரசு மூலமாக சட்டங்களையும், அமைப்புகள் மூலமாக விதிமுறைகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

## உ. உரிமைகள் பற்றிய சமூகநலக் கோட்பாடு:
(Social Welfare Theory of Rights)

ஹாப்ஸ் என்பவர் உரிமைகள் சமூக நலனுக்காக பிறர் நமக்காகவும் பிறருக்காக நாமும் விட்டுக் கொடுக்கும் பண்புகள் என விவரிக்கின்றார். ஜீன் ஜாக்ஸ் ரூசோ, ஜெர்மி பென்தாம், ஜான் ஸ்டூவர்ட் மில், லாஸ்கி போன்றோரும் பயன்பாட்டு அடிப்படையில் உரிமைகளைக் கொண்டுள்ளனர். உரிமைகள் பயன்படக்கூடியவையாய் இருந்தால்தான் சமூக நலன்கள் எட்டப்படும். இன்று மனிதன் தனியொரு உறுப்பாக சமுதாயத்தில் இணைந்துள்ளான். தம்முடைய விட்டுக்கொடுக்கும் பண்பு

மற்றும் சமூக நலன் காரணமாக உரிமைகளின் தன்மையை உணர்ந்ததால் உரிமைகள் பற்றிய சமூக நலக்கோட்பாடு உருப்பெற்றது. தனிமனிதர்களுக்குத் தரப்படும் உரிமைகள் அனைத்துமே சமூக நோக்கு சார்ந்தவை. சமூக நலன், மேம்பாடு ஆகியவற்றை அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிப் பெறலாமென்ற நிலை ஏற்பட்டது. உரிமைகள் பற்றிய சமூக நலக் கோட்பாடானது "பெரும்பான்மையினரின் பெருமகிழ்ச்சி" என்ற நோக்கில் உருவானது. அது சமூகத் தேவைகளைப் புரிந்து கொள்ளல், சமூக ஈடுபாட்டைப் பெருக்கிக் கொள்ளல் ஆகிய நோக்குகளில் உரிமைகளை நெறிப்படுத்திச் செயல்படுத்தும் தன்மையுடையது. சமூக நலனுக்காக உரிமைகளைத் தியாகம் செய்தல் என்ற பண்பை உள்ளடக்கியது. உரிமைகள், சமூக நலனுக்காக சமூகத்தால் பாதுகாக்கப்பட வேண்டியவையாயுள்ளன. மனிதாபிமானம், மனிதத்தன்மை ஆகியவற்றிற்கு மதிப்பளிக்கும் இந்த அறிவியல் காலத்தில் உரிமைகள் சமூக நலன் சார்ந்தவை என்பதை உணர வேண்டும்.

சமூக நலக் கோட்பாடு பெரும்பான்மையினரின் பெருமகிழ்வுக்காக உரிமைகளை வலியுறுத்தும்போது சில பிரிவினர் புறக்கணிக்கப்படலாம். சமுதாயத்தில் அப்படிப்பட்ட பிரிவினர் உரிமைகளை இக்கோட்பாட்டின்படி தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதனால் இதை ஒரு முழுமை பெற்ற கோட்பாடு எனக் கொள்ள இயலாது. அதே நேரத்தில் மக்களாட்சி மதிப்புப் பெற்றுள்ள இக்காலத்தில் செல்வாக்கு பெற்ற தனி நபர்களே சமூக நலனுக்கு மக்களை வழிநடத்திச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே தனியொருவரின் பின்னால் சமுதாயம் செல்லும்போதும் தனிநபர் வணக்கம் வலுப்பெற்று உரிமைகள் பாதிப்புக்கு உள்ளாகின்றன.

### 3. உரிமைகளைப் பற்றிய சட்டம் சார்ந்த கோட்பாடு:
(Legal Theory of Rights)

தொன்று தொட்டு சட்டங்கள் மனிதன் மற்றும் அவனைச் சேர்ந்த சமூகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கான வழிகாட்டிகள் மற்றும் பாதுகாப்பு வழிகளாக உள்ளன. உரிமைகள் சட்டபூர்வமானவையாக ஆக்கப்பட்டு

அனைவருக்கும் பொருந்தக் கூடியனவாய் அமைய வேண்டுமென்பதை இக்கோட்பாடு வலியுறுத்துகின்றது. இயற்கைச் சட்டங்கள் இயல்பானவை. அந்த நோக்கில் மனிதன் இயல்பாகத் தமக்குள், எழுதப்படாத சட்டங்களை தொடக்கத்தில் கொண்டிருந்தான். காலப்போக்கில் சமயச் சட்டங்கள், ஒழுக்க நெறிகள், மன்னர்களால் இயற்றப்பட்ட சட்டங்கள், அரசுகளால் உருவாக்கப்பட்ட சட்டங்கள், நீதிமன்றங்களால் நிலைநாட்டப்பட்ட சட்டங்கள் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டன. இக்கோட்பாட்டில் “அரசு” என்ற அமைப்பு சட்டத்தைத் தோற்றுவிப்பதாக, பாதுகாப்பதாக, நடைமுறைப்படுத்துவதாக அமைந்துள்ளது. இக்கோட்பாட்டின்படி, உரிமைகள் அரசு சார்ந்தவையாயுள்ளன. ஏனெனில் அரசுதான் சட்டமியற்றுதல், நிர்வாகம் செய்தல், நீதியைக் காத்தல் ஆகிய அதிகாரங்களைக் கொண்டுள்ளது. உரிமைகள், அரசு என்னும் வட்டத்தில் அடைக்கப்படுகின்றன. இக்கோட்பாட்டின்படி உரிமைகள் அரசின் செயல்களைக் கட்டுப்படுத்துவனவாக இருக்கக்கூடாது. அதே நேரம் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரின் நலன் என்ற நோக்கில் உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டவையாகும். சட்டம் அனைவருக்கும் பொதுவானதாகையால் சட்டத்தின் மூலம் உரிமைகள் பாதுகாக்கப்படும் நிலை உள்ளது. இக்கோட்பாட்டின் மூலம் மனித உரிமைகளின் நிரந்தரத்தன்மை பறிக்கப்பட்டுள்ளது. மனிதனின் எண்ணங்கள், அரசாங்கத்தின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தே உரிமைகள் அமைவதால், பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை பெருகுகின்றது. அதனால் உரிமைகளுக்கு சட்டப் பாதுகாப்பு இன்றியமையாததாகிறது. பார்க்கர் என்பவர் சட்ட உரிமைகளை வலியுறுத்துகின்றார். பாசன்கைத் என்பவரும் உரிமைகளின் சட்டத்தன்மை, சட்ட உரிமைகளின் இணைப்பேயாதலால், சட்டத்தின் மூலம் அமல் செய்யப்படுமென்றார். இருப்பினும் லாஸ்கி குறிப்பிட்டவாறு சட்டங்களுக்கு உரிமையைப் பாதுகாக்கும் கடமை உள்ளது. ஆனால் உரிமைகளைச் சட்டங்கள் தோற்றுவிப்பதில்லை. மேலும் சட்டங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் உரிமைகள் நிரந்தரமானவையல்ல. உரிமைகள் இயல்பானவை; இயற்கையானவை; மனிதனுக்காக ஆக்கப்பட்டவை. எனவே சட்டத்தின் பங்கு உரிமைகளைக் கட்டுப்படுத்து

தன்மையுடையதென்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். உரிமைகள் சட்டத்தின் பாதுகாப்புக்குள்ளாகும்போது உரிமைகளைத் தேவைக்கேற்ப சட்டங்களால் திரித்துக் கூறப்படுவதற்கும் வாய்ப்புண்டு.

சட்ட ரீதியான உரிமைகள், ஒழுக்கம் சார்ந்த நன்னடத்தை சார்புள்ளவை. சட்ட அடிப்படையில் ஒழுக்கப் பண்பு சார்ந்த உரிமைகளில் தலையிட முடியாத நிலை உண்டு. எடுத்துக்காட்டாக பெற்றோர்கள் தமது குழந்தைகளை வளர்ப்பதில் ஏற்படும் குறைகளுக்காக அவர்கள் மீது எவ்விதமான சட்ட உரிமையும் மேற்கொள்ள முடியாது. மேலும் சட்ட ரீதியான உரிமைகள் நீதிமன்றத்தின் எல்லை வரையறைகளுக்கு உட்பட்டவை. சட்டம் சார்ந்த உரிமைகளும், வாழ்க்கை மற்றும் அரசியல் சார்புடையவை. ஒரு மனிதன் நேர்மையான வழியில் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல் வாழ்க்கை அல்லது வாழ்வியல் உரிமை எனப்படும். அதைப்போல இன்று ஒரு நாட்டின் அரசே இறைமை படைத்த அமைப்பாக உள்ளதால் உரிமைகள் அரசியல் சட்டங்களுக்கு உட்பட்டு அரசால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

**4. உரிமைகள் பற்றிய வரலாற்றுக் கோட்பாடு:**
(Historical Theory of Rights)

கால ஓட்டத்தில் எழும் மாற்றங்களின் அடிப்படையில் உருவானதே உரிமைகளைப் பற்றிய வரலாற்றுக் கோட்பாடு. தொன்மைக் காலத்தில் மரபுகள், பழக்கவழக்கங்கள், வழக்காறுகள் ஆகியவற்றின் வாயிலாக உரிமைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு நிலைநாட்டப்பட்டன. இவ்வுரிமைகள் வழிவழியாக அனுபவிக்கப்பட்டவை. ஆயினும் கால மாற்றங்களுக்கு உட்பட்டு உரிமைகளின் தன்மை, போக்கு ஆகியன மாறுதலுக்கு உட்படுத்தப்பட்டன. எனவே அரசியல் எழுச்சி, சமூக உணர்வுக் கண்ணோட்டம், பொருளியல் சித்தாந்தங்களின் தோற்றம், சமய அடிப்படையிலான சீர்திருத்தங்கள் ஆகியன உரிமைகளில் மாறுதல்களுக்குக் காரணமாயின. அதாவது அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் உரிமைகளைப் பாதித்தன. எடுத்துக்காட்டாக கிரேக்க நகர அரசுகள், ரோமானிய மன்னராட்சி, சிறுகுழுவினராட்சி, மக்களாட்சி, பொதுவுடமை, முதலாளித்துவம், சமதர்மம், கட்டுப்படுத்தப்பட்ட அல்லது

வரம்பற்ற முடியாட்சி என்னும் வல்லாட்சி, ஒளி சான்ற அல்லது பயனுள்ள வல்லாட்சி என்ற பல அரசியல் பண்புகளுக்கு ஏற்ப உரிமைகளும் மாற்றங்களுக்கும் பாதிப்புகளுக்கும் உட்பட்டன. எனவே வரலாற்றுக் கோட்பாடனது வரலாற்று காலத்தில் உரிமைகள் எவ்வாறிருந்தன என்பதை உணர்த்துகின்றது.

கிறித்துவ சகாப்தத்திற்கு முந்திய காலத்தில் அதாவது மனிதன் காட்டுமிராண்டி என்ற நிலையிலிருந்து வரலாற்றுக் காலத்தில் அடியெடுத்து வைத்த போது இயற்கை நல்கிய உரிமைகளை எவ்விதமான தடைகளுமின்றி அனுபவித்தான். பின்னர் ஒழுக்கம் மற்றும் சமயம் சார்ந்த அமைப்புகளும் இலக்கியங்களும் உருவானபோது அவற்றுள் விளக்கப்பட்டிருந்த உரிமைகள் செல்வாக்குப் பெற்றன. மனித உரிமைகள் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டன. பின்னர் சட்டத்தின் ஆதிக்கம், ஆட்சி, ஆட்சித் துறைகள் ஆட்சிமுறை அமைப்புகள் வலுப்பெற்றபோது உரிமைகள் சட்டத்தின் பிடிக்குள் குறுக்கப்பட்டன. கி.பி. 1215-இல் ஜான் மன்னரால் ரன்னிமீடு என்ற இடத்தில் கையொப்பமிடப்பட்ட மேக்னகார்ட்டா என்ற பெரும் சாசனம் அல்லது மகாசாசனம் உரிமையடிப்படையில் எழுந்த ஒரு பத்திரமாயிற்று. கி.பி. 1222-இல் ஹங்கேரியில் மக்கள் உரிமைகள் மன்னரால் நிலைநாட்டப்பட்டன. இங்கிலாந்தில் 1628-இல் சமர்ப்பிக்கப்பட்ட உரிமை மனு, 1688-இல் எழுந்த உரிமைச் சட்ட வரைவு போன்றவை மனிதர்களின் சுதந்திர எழுச்சியைப் பற்றிக் கூறுகின்றன. 1776-இல் வெளியிடப்பட்ட அமெரிக்க சுதந்திரப் பிரகடனம், 1789-இல் வெளியான மனித உரிமை மற்றும் மக்கள் உரிமைப் பிரகடனம், 1945 முதல் பிரகடனப்படுத்தப்பட்ட ஐக்கிய நாட்டவைச் சாசனம், 1948-ஆம் ஆண்டு டிசம்பர் 10-இல் வெளியான அனைத்துலக மனித உரிமைகள் பற்றிய விதிகள், 1968-இல் வெளியிடப்பட்ட டெக்ரான் அறிக்கை, 1975-இல் வெளியான ஹெல்ஸிங்கி அறிக்கை, 1978-இல் கூட்டப்பட்ட மனித உரிமைகள் மாநாடு போன்றவையெல்லாம் வரலாற்று நோக்கில் உருவானவையாகும். இவ்வடிப்படையில் இந்தியாவில் பெண்ணுரிமைச் சட்டங்கள் பல இயற்றப்பட்டன. சொத்துரிமைச் சட்டங்களும் படிப்படியாக இயற்றப்பட்டன. தற்காலத்தில் மனிதனின் பலதரப்பட்ட உரிமைகளும் வரலாற்று வளர்ச்சிப் படிநிலைகளாக உருவாக்கப் பட்டவையாகும்.

**5. உரிமைகள் பற்றிய பொருளாதாரக் கோட்பாடு:**
(Economic Theory of Rights)

இன்றைய உலகில் பொருளாதாரம் முன்னணியில் உள்ளது. பழங்காலத்திலும் பொருளியல் செயல்பாடுகள் காணப்பட்டாலும் தனிப்பட்ட கோட்பாடுகள் மலர்ந்திருந்ததில்லை. மன்னர்கள் பொருளாதாரத்தைக் கையாண்டனர். உற்பத்தி, பகிர்வு என்ற நிலைகள் இருந்தபோதிலும் அவை கோட்பாடுகளாக மலர்ந்ததில்லை. பின்பு எழுந்த தொழிற்புரட்சியினால் தொழிற்சாலைகள் பெருகின. அதனால் உற்பத்தி, பகிர்வு என்ற நிலைகளில் கோட்பாடுகள் எழுந்தன. பொருளாதார நோக்கில் உருவான பொதுவுடமை, சமதர்மம், முதலாளித்துவம் போன்ற கோட்பாடுகளும் பொருளாதார அடிப்படையிலான உரிமைகளுக்கு வழிவகுத்தன. ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடுகளும் மனித உரிமைகளைப் பெருக்கின. பொருளாதார நோக்கில் தேவைகள் மிகுந்தன. வர்க்கப் போராட்டம் என்பதும் பொருளியல் சார்புடையதே. பணக்காரர்கள் ஏழைகளைச் சுரண்டினர். இதனால் உரிமைப் பாதிப்பு ஏற்பட்டது. உபரி மதிப்புக் கோட்பாடு, மால்தஸின் மக்கள்தொகைக் கோட்பாடு போன்றவையெல்லாம் பொருளியல் உரிமைகளுக்கு வித்தாக இன்று அமைந்துள்ளன.

மேலே காணப்பட்ட உரிமைக் கோட்பாடுகள் காலத்தின் மாற்றங்களால் பல்வேறு வகையான வடிவங்களைப் பெற்றன. அனைத்துக் கோட்பாடுகளும் மனித உரிமையைச் சார்ந்தே காலத்தின் தன்மைக்கேற்ப எழுந்தவை. இக்கோட்பாடுகள் அனைத்துமே உரிமைகள் மனிதர்களுடன் பின்னிப் பிணைந்தவை என்ற கருத்தைத் தந்துள்ளன. ஆயினும் மனித உரிமைகள் இல்லையெனில் மனிதனோ அவனைச் சார்ந்த சமுதாயமோ முன்னேற்றப் பாதையில் செல்லவியலாது. இன்றைய மக்களாட்சி, பொதுவுடமை, முதலாளித்துவ சமுதாயத்தில் உரிமைகள் அடிப்படைப் பண்புகளாக அமைந்துள்ளன.

- - -

# 4

## மனித உரிமைகளின் வகைகள்

## (Kinds of Human Rights)

மனிதன் ஒரு சமூக விலங்கு. கூட்டு வாழ்க்கையில் பற்றுடையவன். தன்னுடைய பகுத்தறிவைப் பயன்படுத்தி தேவை நிறைவுக்காகவும், பாதுகாப்புக்காகவும் தனது உரிமைகளைப் பெற்றுச் செயல்பட விழைகின்றவன். சமுதாயமாக இணைந்து வாழ்வதால், விட்டுக்கொடுக்கும் பண்பு அமையப் பெற்று தம்முடைய உரிமைகளைத் தக்கவைத்துக் கொள்கின்றான். அதற்கு சட்டம், அரசு, நீதிமன்றங்கள் துணை நிற்கின்றன. உரிமைகள் மனித இனத்தின் வளர்ச்சிக் கூறுகளுக்கு ஏற்ப படிப்படியாக வளர்ச்சி பெற்று பலவகைகளாக மலர்ந்துள்ளன. மனித வாழவில் உரிமைகள் தவிர்க்க இயலாத பண்புகளாகும். இயற்கை தந்த உரிமைகள் இன்று மாறுபட்டு காலத்தின் தேவைகளுக்கேற்ப விரிவாக்கம் பெற்றுள்ளதால் அவற்றின் வகைகளையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனித உரிமையும் தனித்தன்மை கொண்டது. ஆகவே, ஒவ்வொன்றைப் பற்றியும் அறிதல் இன்றியமையாததாகும். பொதுவாக உரிமைகள் தார்மீக அல்லது அறநெறி உரிமைகள் மற்றும் சட்ட உரிமைகள் எனப் பகுக்கப்படுகின்றன. எனவே அவற்றைப் பற்றித் தனித்தனியாகத் தொடர்ந்து காணலாம்.

**தார்மீக அல்லது அறநெறி உரிமைகள்** (Moral Rights)

தார்மீக அல்லது அறநெறி உரிமைகள் மனிதாபிமான நோக்கில் மனிதநேயம் மற்றும் மனிதத் தன்மையைச் சார்ந்தவையாகும். இவ்வுரிமைகள் அறநெறிக் கோட்பாடுகள் மற்றும் சமயத் தத்துவங்களைப் பின்னணியாகக் கொண்டவை. தனிமனிதனின் மனச்சாட்சிக்கு முக்கியத்துவமளிக்கின்றன. சமூகத்தால் ஏற்கப்படுபவை. ஆனால் அதற்கெனத் தனிப்பட்ட சட்ட அதிகாரங்கள் இல்லை. பெற்றோர் பிள்ளைகளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்தல், பிள்ளைகள் பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுதல், ஆபத்திலுள்ள ஒருவரை அருகிலுள்ளோர் காப்பாற்றுதல் போன்றவை தார்மீக நோக்குடையவை. இவ்வுரிமைகள் அனைவருக்கும் உண்டாயினும் அவற்றைச் செயல்படுத்துதல் அவரவர் விருப்பு வெறுப்பு மற்றும் சூழ்நிலைகள் சார்ந்தவை. இவற்றைச் செய்யவில்லை என்பதற்காக யாரும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது. இவற்றை எழுதப்படாத கடமைகள் எனக் கூறலாம். இவற்றைச் செய்வதன் வாயிலாக தனியொரு மனிதர் தன்னுடைய மதிப்பு, பெருமை, செல்வாக்கு ஆகியவற்றைப் பெருக்கிக் கொள்ளலாம். அரசும் இத்தகைய உரிமைகளை உடைய செயல்களைச் செய்தாலோ அல்லது செய்யாவிட்டாலோ அதில் தலையிடுவதில்லை. தார்மீக உரிமைகள் அனைவருக்கும் பொருந்தக்கூடியவை. இருப்பினும் இவற்றைச் செயல்படுத்துவது தனிநபரின் உரிமை. ஒருவர் மனிதாபிமான நோக்கில் அவ்வுரிமைகளை நடைமுறைப்படுத்தலாம் அல்லது அமைதியாக இருந்து விடலாம். எடுத்துக்காட்டாக புத்தர், மகாவீரர், ஏசுபெருமான், நபிகள் நாயகம், குருநானக் முதலியோர் சமுதாயச் சிக்கல்களுக்குத் தீர்வு காணக்கூடிய வகையில் தாமே முன்வந்து தார்மீக நோக்கில் அறநெறிக் கோட்பாடுகளை சமுதாயத்திற்கு நல்கினர். காந்தியடிகள், மார்ட்டின் லூதர்கிங், ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல், அன்னை தெரசா முதலியோர் தமக்கிருந்த அறநெறி என்ற தார்மீக உரிமைகளைச் செயல்படுத்தி சமுதாய மேம்பாட்டிற்குத் துணை நின்றனர். இதைப்போன்றே ஒளிசான்ற அல்லது பயனுள்ள வல்லாட்சியாளர்களெனத் திகழ்ந்த அசோக மௌரியர், பதினான்காம் லூயி, மகா பிரடரிக், மகா பீட்டர் போன்றோரும் தார்மீக உரிமைகளின் பின்னணியிலேயே சமகாலச் சமுதாய வளர்ச்சிக்கு வித்திட்டனர்.

**சட்ட உரிமைகள்** (Legal Rights)

அரசு, தன் சட்டத்தின் துணையுடன் பாதுகாக்கும் உரிமைகள் சட்ட உரிமைகள் எனப்படும். சட்ட உரிமைகள் பாரபட்சமற்றவை. இயற்கை உரிமைகளிலிருந்து மாறுபட்டவை. மக்களுக்காக மக்களால் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு சட்டத்தாலும் நீதிமன்றப் பாதுகாப்பாலும் ஒவ்வொரு மனிதனும் கொண்டுள்ள உரிமைகள் சட்ட உரிமைகளாகும். இவ்வுரிமைகள் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவை. சட்ட உரிமைகள் எழுத்து மூலம் வரையறுக்கப்பட்டவையாகும். இவ்வுரிமைகளை மீறுபவர்களைச் சட்டப்படி தண்டிக்கலாம். எனவே சட்ட உரிமைகளுக்கு நீதிமன்றப் பாதுகாப்பு உண்டு. இவ்வுரிமையானது இனம், மொழி, இடம், சாதி மற்றும் நிற வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டனவாய் அனைவருக்கும் பொதுவானவையாகும். சட்டத்தின் வாயிலாக நலிந்தோர், பிற்படுத்தப்பட்டோர் பின்தங்கியோர், பெண்கள் ஆகியோரின் உரிமைகள் எவ்விதமான பாகுபாடும் இன்றிப் பாதுகாக்கப்படுகின்றன. இவ்வுரிமைகளை நிலைநாட்ட வேண்டியது அரசின் கடமை. சட்ட உரிமைகள் காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் மாறுபடுபவை. தார்மீக அல்லது அறநெறி உரிமைகளைப் போலல்லாமல் சட்ட உரிமைகள் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியுள்ளன. அவை, 1) வாழும் உரிமைகள், 2) அரசியல் உரிமைகள் 3) பொருளாதார உரிமைகள் என்பனவாகும். அவை ஒவ்வொன்றும் பலதரப்பட்ட பிரிவுகளைக் கொண்டுள்ளன. அவற்றைப் பற்றித் தொடர்ந்து காணலாம்.

**வாழும் உரிமைகள்**

இவற்றை வாழ்வியல் உரிமைகள் (Civil Rights) என்றும் அழைக்கலாம். இவ்வுரிமைகளை வாழ்வதற்கான உரிமை (Right to Live), சுதந்திரமாக வாழும் உரிமை (Right to Liberty), குடும்பம் நடத்தும் உரிமை (Right to Family), வேலை செய்யும் உரிமை (Right to Work), கல்வி கற்கும் உரிமை (Right to Education), சொத்துரிமை (Right to Property), பேச்சுரிமை மற்றும் எழுத்துரிமை (Right to Speak and Write), ஒப்பந்த உரிமை (Right to Contract), சமய உரிமை (Right to Religion), கூட்டம் கூட மற்றும் சங்கங்கள் அமைக்கும் உரிமை (Right

to Assemble and Association), சமத்துவ உரிமை (Right to Equality) என்று பிரிக்கலாம். இவையனைத்தும் தனி மனிதனின் வாழ்க்கையுடன் தொடர்புடையவை. இவை இல்லையெனில் இன்றைய சமுதாயத்தில் தனிமனிதன் சுதந்திரமாக இயங்க முடியாது. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கருத்துப்படி வாழ்க்கையை முழுமை பெறச் செய்யும் நோக்கில் உரிமைகள் செயல்படுத்தப்பட்டு சட்டத்தால் பாதுகாக்கப்படுகின்றன. தற்கொலை, கொலை, சிசுக்கொலை போன்றவற்றைச் செய்ய யாருக்கும் உரிமை இல்லை. வெறுப்பால் செய்யப்படும் இத்தவறான செயல்கள் சட்டத்திற்குப் புறம்பானவை. தண்டனைபெறத் தக்கவை. இத்தகைய எதிர்மறைப் பண்புகளுக்கு எதிரான நேர்மறை அல்லது உடன்பாட்டு உரிமைகள் வாழும் உரிமைகளைச் சார்ந்தவையாகும். (எ.கா) மக்களின் பாதுகாப்பான வாழ்க்கை, சுதந்திரமாகச் செயல்படல், வேலை பெறுதல் போன்றவை. உடன்பாட்டு உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது அனைத்து அரசுகளின் கடமை. இவை அனைத்துமே அனைத்து நாடுகளிலும் வாழக்கூடிய அத்தனை மனிதர்களுக்கும் பொருந்தக் கூடியவை. இவற்றை மேலே சொல்லப்பட்ட பிரிவுகளின்படி தனித்தனியாகக் கண்டால் வாழும் உரிமைகளைப் புரிந்து கொள்ளலாம்.

### வாழ்வதற்கான உரிமைகள்

வாழ்வு சீரும் சிறப்புமாகத் திகழ உரிமைகள் தேவை. மனிதன் ஒரு சமூக உறுப்பு. அவனுடைய வாழ்க்கை சீராக அமைய அவனுக்குப் பல உரிமைகள் தரப்படுகின்றன. சுதந்திரமாக, தேவைகளை நிறைவு செய்துகொண்டு வாழ அவனுக்கென சில அடிப்படை உரிமைகள் உண்டு. அவற்றைத் தருவதும், பாதுகாப்பதும் அரசின் கடமை. இவ்வுரிமைகளில் யாரும் தலையிட இயலாது. ஆனால் தனியொரு மனிதன் சமூகத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு சட்டங்களை மதிக்காமல் இருக்க உரிமை இல்லை. அவ்வாறிருப்பின் சட்டம் அவனைத் தண்டிக்கும். அவன் சமூகத்தின் எதிரி என்று அடையாளம் காட்டப்படுவான். ஒவ்வொரு மனிதனும் சட்டம் வழங்கியுள்ள வாழ்வதற்கான உரிமைகளை முறையாகப் பிழையின்றிப் பயன்படுத்த வேண்டும். சட்டத்திற்குப்

புறம்பான செயல்களை தனது உரிமை என்ற தவறான அடிப்படையில் ஒருவன் செய்தால் சட்டம் அவனைத் தண்டிக்கும். குற்றவாளிக்குத் தரப்படும் தண்டனையானது அவனுடைய தவறுகளை உணர்ந்து திருத்திக்கொள்ள வாய்ப்பளிக்கும் பண்புடையதாக இருத்தல் வேண்டும்.

**சுதந்திரமாக வாழும் உரிமை**

மனிதன் சுதந்திரத்துடன் பிறக்கிறான். ஆகவே சுதந்திரமாக வாழ அவனுக்கு உரிமையுண்டு. தனது ஆற்றல், திறமை, ஆளுமை ஆகியவற்றைப் பயன்படுத்தி பல செயல்களைச் செய்து வாழ்க்கையை இடையூறுகளின்றி நடத்த வகை செய்வது இந்த உரிமை. இவ்வுரிமை அடிப்படையான நியாயமான உரிமையாகும். சுதந்திரம் தனி மனிதனின் பிறப்புரிமைதான். ஆனால் அவ்வுரிமை சூழ்நிலைகளுக்கேற்ப, அடுத்தவரையோ அல்லது சமூகத்தையோ துன்புறுத்தாமல் பிறருக்கும் வாழும் உரிமையுண்டு என்பதை மனத்திற்கொண்டு செயல்படுவதற்காகவும் தரப்படுவதாகும். இது மனிதனுக்குத் தேவையானது. அரசின் சட்டங்களால் தரப்பட்டு நீதிமன்றத்தால் பாதுகாக்கப்படுவதாகும். இவ்வுரிமையானது சமத்துவம், சகோதரத்துவம் என்ற கருத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதால் எல்லோரும் ஒத்தநிலையில் உரிமைகளைக் கொண்டவர்களாவர். இவ்வுரிமையானது சுதந்திரமாக நடமாடும் உரிமை சார்ந்ததாகவும் அமையும். இவற்றை அரசு தடை செய்வதில்லை. இவ்வுரிமையை பிரெஞ்சுப் புரட்சி, சீனப் புரட்சி, ரஷ்யப் புரட்சி முதலிய புரட்சிகள் நிலைநாட்டின என்பதை வரலாறு நமக்கு உணர்த்துகின்றது.

**குடும்பம் நடத்தும் உரிமை**

இதை இல்லற வாழ்க்கைக்கான உரிமை என்றும் கொள்ளலாம். நல்லறமான இல்லற வாழ்க்கையே முழுமையானதாகும். சமூக மனிதன் குடும்பம் என்னும் கூட்டில் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தால்தான் அவனது வாழ்க்கை மகிழ்ச்சியுடையதாக அமையும். சமூக அமைப்பானது பல குடும்பங்களின் இணைப்பாகும். ஆகவே சமுதாயத்தின் மேம்பாட்டிற்கு குடும்பம் உதவ பல உரிமைகள் தரப்பட்டுள்ளன. தனிமனிதன்

கட்டுக்கோப்பான குடும்பத்தை திருமணத்தின் வாயிலாக பெற உரிமையுடையவன். திருமணத்தைத் தடை செய்ய சட்டத்திற்கு உரிமையில்லை. ஆனால் திருமணம் செய்து கொள்ள வயது வரம்பினை நிர்ணயிக்கும் உரிமை அரசுக்கு உண்டு. குடும்பம் சீரானதாக அமைந்தால் தான் சமூகம் சீரடையும். குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், பலதார மணத் தடைச் சட்டம், ஒப்புக்கொள்ளப்பட்ட திருமணம், திருமண விலக்கு போன்ற சட்டங்கள் மூலம் குடும்ப வாழ்க்கை முறையானதாக அமைய சட்டங்கள் வகை செய்கின்றன. அதனால் திருமணப் பதிவுச் சட்டம், விவாகரத்துச் சட்டம் (மணவிலக்குச் சட்டம்), சொத்துரிமைச் சட்டம், பாகப் பிரிவினைச் சட்டம் போன்றவற்றின் வாயிலாகவும் குடும்பங்கள் பாதுகாக்கப்படுகின்றன. குடும்பநலச் சட்டங்கள் பல உருவாக்கப்பட்டன. அரசுச் சட்டங்கள் பல, குடும்பங்கள் ஒழுங்காக இருக்க வேண்டுமென்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய சட்டங்களின் மூலம் குடும்பத் தலைவர்கள் முறையாகக் குடும்பத்தை நடத்திச் செல்லும் உரிமையைப் பெறுகின்றனர். குடும்பங்களை உருவாக்கும் போது ஒருவருக்குள்ள உரிமைகள் செம்மைப்படுத்தப்படுகின்றன. அதைப் போல குடும்ப நலனைப் பேணிக்காக்க, பிள்ளைகளைப் படிக்கவைத்து ஆளாக்க, திருமணம் செய்து வைக்க, திருமணத்தின் வாயிலாக சமுதாயத் தொடர்புகளை விரிவாக்கிக் கொள்ள ஒவ்வொரு வயது வந்த ஆண் மற்றும் பெண்ணுக்குத் தரப்பட்டதே இவ்வுரிமை. குடும்பம் சீரமைக்கப்பட்டு சிறப்பான சமூக நிறுவனமாகச் செயல்பட இவ்வுரிமை தேவை.

**வேலை செய்யும் உரிமை**

பொருளியல் சார்ந்த உலகில் ஒவ்வொரு மனிதனுக்கும் முறையான வழிகளில் தனது பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள உரிமையுண்டு. அவற்றுள் ஒன்றுதான் வேலை செய்யும் உரிமை. வேலை செய்து பொருளீட்டி தன்னையும் தனது குடும்பத்தையும் பாதுகாக்கும் கடமையை ஆற்ற இவ்வுரிமை தரப்படுகின்றது. வேலை செய்யும் உரிமை என்பது தகுதி, கல்வித் தரம், வயது வரம்பு போன்ற பின்னணிகளில் மனிதர்கள் பெற்றுள்ள உரிமை. இது தனிமனிதனின் அடிப்படை உரிமை எனப்படுகின்றது. அரசே இவ்வுரிமையைப்

பாதுகாக்கின்றது. எடுத்துக்காட்டாக உடல் ஊனமுற்றோர், அபலைப் பெண்கள் (துணையற்ற பெண்கள்), கணவரை இழந்தவர்கள் போன்றோருக்கு வேலை வாய்ப்பை நல்குகின்றது. வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தகுதியடிப்படையில் வேலை செய்யும் உரிமையை அரசே பெற்றுத் தருகின்றது. சட்டங்களின் பணிப் பாதுகாப்பு, பதவி உயர்வு, பணி ஓய்வு, ஓய்வூதியம் போன்றவற்றையும் அரசு செய்கின்றது. இவை அனைத்தும் வேலை செய்வோருக்கு சமமான நீதி தரப்பட வேண்டுமென்பதற்காக அரசு மேற்கொள்ளும் பணிகளாகும். போட்டித் தேர்வாணைக் குழுக்கள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்று, வெற்றி பெற்று பணியில் அமர விதிமுறைகளின் அடிப்படையில் ஆண், பெண் இருபாலருக்கும் உரிமையுண்டு. வேலையற்றவர்கள் தகுதிமூலம் வேலைகளைப் பெற இயலாவிடின் அவர்களுக்கு நிவாரணம் தந்து அவர்களைத் தொடர்ந்து வேலைக்கு முயற்சி செய்ய அரசு துணை புரிகின்றது. தனியார் நிறுவனங்களும் அரசின் சட்டவிதிமுறைகளுக்கு உட்பட்டுச் செயல்பட வேண்டியவையாயுள்ளன. எனவே வேலை செய்யும் உரிமையானது அரசால் பாதுகாக்கப்படுகிறது.

**கல்வி கற்கும் உரிமை**

மனிதன் தன் அக இருளை அகற்றி அறவொளியைப் பெறத் துணை நிற்பது கல்வி. ஆறறிவு கொண்ட மனிதன் முறை சார்ந்த மற்றும் முறை சாராக் கல்வியின் மூலம் தன்னுடைய அறிவைப் பெருக்கிக் கொள்ள உரிமை கொண்டவன். அதற்கான வசதியையும் வாய்ப்புகளையும் தரவேண்டியது சமுதாயம் மற்றும் அரசின் கடமை. ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ள ஒருவருக்குக் கல்வி இன்றியமையாததாகும். கல்வி அறிவு இல்லாதவர்களால் உலகத்தையோ வளர்ச்சியையோ, முன்னேற்றத்தையோ அதற்கான வழிமுறைகளையோ புரிந்துகொள்ள இயலாது. இன்று கல்வியானது தொழிற்கல்வி சமூகக்கல்வி எனப் பல படிநிலைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. தனது தகுதிக்கேற்ற விருப்பமான கல்வியைப் பெற வேண்டிய கட்டாயக் கல்விக்கு முக்கியத்துவமளித்துள்ளன. **'அனைவருக்கும் கல்வி'** என்ற நிலைப்பாட்டின்படி 6 முதல் 14 வயதுள்ளவர்களுக்கு கட்டாய இலவச

கல்வி தரப்படுகின்றது. மேனிலைக்கல்வி, தொழிற்கல்வி பெற உதவித் தொகை, கல்விக் கடன் வசதி ஆகியன உள்ளன. முதியோர்கல்வி, திறந்த வெளிப் பல்கலைக்கழகம் போன்ற வழிகளிலும் கல்வி வளர்ச்சித் திட்டங்கள் உள்ளன. இந்திய அரசியலமைப்பின் 83ஆம் திருத்தத்தின் வாயிலாக 6 வயது முதல் 14 வயது முடியவுள்ள குழந்தைகளுக்கு கட்டாயக் கல்வி தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொழிற்கல்வி, தொழிற் பயிற்சி மூலமாகவும் அறிவாற்றலைப் பெருக்கி அதன் மூலம் சுயமாகத் தொழில் செய்து பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள அரசு ஏற்பாடு செய்துள்ளது. கணினித்துறை, இணையதளம் போன்றவை அறிவை வளர்க்கத் துணையாக உள்ளவை. மனிதனின் பன்முக வளர்ச்சிக்கான கல்வி கற்கும் உரிமை இன்று விரிவாக்கம் பெற்றுள்ளது. பெற்றோர் தம்முடைய குழந்தைகளின் ஆற்றல்களை அளவிட்டு அதற்கேற்ற கல்வியை அவர்களுக்குத் தரக் கடமைப்பட்டவர்களாயுள்ளனர். ஒருவர் மற்றொருவருக்குப் போதித்தல் என்ற கோட்பாட்டின் மூலமாகவும் கல்வி வளர்ச்சிக்கு வகை செய்யப்பட்டுள்ளது. கற்றல் உரிமையை நிறைவு செய்யக் கூடிய வகையில் பலதரப்பட்ட ஊடகங்களும் பணியாற்றுகின்றன.

### சொத்துரிமை

'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை' என்ற கோட்பாட்டின்படி பொருளுக்கு முக்கியத்துவம் தரும் இன்றைய உலகில், சொத்து வைத்துக் கொள்ள வேண்டுமென்ற உந்துதலும் அவாவும் அனைவருக்கும் உண்டு. தனக்கென்று ஒரு வீடு, நிலம், ஆடை, அணிகலன்கள், அன்றாடத் தேவைப் பொருட்கள் எனப் பல வழிகளில் உடைமைகளைப் பெருக்கிக் கொள்கின்றனர். தனியார் சொத்துரிமை மூலம் தானும் தன்னுடைய சந்ததியாரும் பயன்பெற முடியும். மேலும் சொத்து இருந்தால் சமூக அந்தஸ்து, மதிப்பு, திருப்தி, மகிழ்ச்சி ஆகியன கிடைக்கின்றன. அரசு, சட்டத்தின் வாயிலாக தனியார் சொத்துரிமையைப் பாதுகாக்க வகை செய்துள்ளது. சொத்து வாங்க, விற்க, முதலீடு செய்ய, அடகு வைத்து பணம் பெற்று தொழில் செய்ய வசதிகள் உள்ளன. வீட்டுக் கடனைப் பெற்று வீடு ஒன்றை உடமையாக்கிக் கொள்ளவும் இன்று

### உரிமைகளும் கடமைகளும்

உரிமைகளும் கடமைகளும் தமக்குள் தொடர்புடையவை. கடமைகளைச் செய்வதன் மூலம் உரிமைகளைப் பெறலாம். கடமையைச் செய்ய உரிமைகள் தேவை. கடமையை உணர்பவர் உரிமையைப் புரிந்து கொள்வார். அவை ஊடும் பாவுமெனப் பின்னிப் பிணைந்தவை. கடமைகள் தனிமனிதன் தனக்காகவும், பிறருக்காகவும், அரசுக்காகவும், நாட்டிற்காகவும் ஆற்ற வேண்டிய தவிர்க்க இயலாத இன்றியமையாத பண்புகளாகும். இவற்றைச் செய்து முடிப்பதில் எவ்விதமான பாகுபாடும் கிடையாது. வேறுபாடுகள் கிடையாது. கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்பவர்கள் பிறரால் மதித்துப் போற்றப்படுவர்.

### வகைகள்

கடமைகளை ஒழுக்கநெறி சார்ந்த கடமைகள் (Moral Duties), சட்டப்படியான கடமைகள் (Legal Duties) என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முன்னது இயல்பானது; இயற்கையாக மனிதனிடம் இருக்க வேண்டியது. பின்னது சட்டப்படி ஆற்றப்பட வேண்டியது.

### ஒழுக்க நெறி சார்ந்த கடமைகள்

இவை மனிதனுடன் பிறந்தவை. நீதியை நிலைநாட்டல், முறையற்ற செயல்களைச் செய்யாதிருத்தல், உண்மை பேசுதல் போன்றவை அறநெறிக் கடமைகளாகும். தன்னைத் தானே பேணிக் கொள்ளல், உற்றாரையும் பெற்றோரையும் பாதுகாத்தல், சுற்றுச்சூழலைத் தூய்மையாக வைத்திருத்தல், அமைதியான, ஒழுங்கான நடத்தை உடையவராயிருத்தல், சமூகப் பணிகளுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளல் போன்றவை ஒழுக்கநெறி சார்ந்த கடமைகளாகும். இக்கடமைகளை ஆற்றவேண்டியது தனிமனிதனின் பொறுப்பு. தனது சொந்த நலனுக்காகப் பயன்படும் இக்கடமைகளை ஆற்றத் தவறியமைக்காக ஒருவரைக் கைது செய்யவோ தண்டிக்கவோ முடியாது.

### சட்டப்படியான கடமைகள்

இந்திய அரசியலமைப்பு, உரிமைகளுடன் சில கடமைகளையும் சுட்டிக்காட்டியுள்ளது. இவை கட்டாயமாக ஒவ்வொரு குடிமகனாலும் ஆற்றப்பட வேண்டியவை. சட்டத்திற்கு உட்பட்டுச் செயல்படுவது கடமை, நீதியடிப்படையில் சட்டம் சார்ந்த கடமைகள் ஆற்றப்படுகின்றன. சட்டப்படியான கடமைகள் தவிர்க்க இயலாதவை. (எ.கா) சாலை விதிகளை மதித்தல், பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல், தேசியகீதம், தேசியக் கொடி ஆகியவற்றை மதித்தல் போன்ற இக்கடமைகளை ஆற்றவில்லையெனில் அல்லது தவறாக நடந்தால் சட்டம் அவன் மீது பாயும்.

### அரசுக்கு விசுவாசமாயிருத்தல்

மக்களாட்சி நிலவும் நாடுகளில் மக்கள் தமது கடமைகளை ஆற்றினால்தான் மக்களாட்சி சிறப்புப் பெறும். இந்நிலையில் தமக்காக, தம்மால், தாமே உருவாக்கிய அரசின் சட்டங்கள் விதிமுறைகள் ஆகியவற்றை மதிக்க வேண்டும். அனைத்து நிலைகளிலும் அரசுக்கு ஆதரவாகச் செயல்பட்டு அமைதி, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்ட வேண்டும். அரசில் குறைகள் இருந்தால் மக்கள் அதை நிறைவேற்ற மாட்டார்கள். அதே நேரம் அரசின் முறையற்ற செயல்களை முறையான வழிகளில் எதிர்ப்பது, அரசுக்கு உணர்த்துவது, அரசின் செயல்திட்டங்கள், அவற்றின் விளைவுகள் ஆகியவற்றை மதிப்பிட்டு உண்மையை வெளிக்கொணர்வது போன்றவை மக்களின் கடமையாகும்.

### பொருளியல் நோக்கு

அரசுக்கான வரி, கட்டணங்கள், அபராதத் தொகை ஆகியவற்றைச் செலுத்த வேண்டியது பொது மக்களின் கடமை. அக்கடமையிலிருந்து தவறினால் அரசு மக்களுக்கு பல திட்டங்களைச் செய்ய முடியாமல் போகும். அதனால் மக்கள்நலப் பணிகள் நிறைவேறாமல் மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

## வாக்குரிமை

மக்களாட்சி என்பது பிரதிநிதித்துவ முறையைச் சார்ந்தது. வாக்குரிமை பெற்ற அனைவரும் தேர்தலில் வாக்களித்து தமது பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கறைபடா கரங்களுடன் முறைப்படி வாக்குச்சாவடிக்குச் சென்று மனச்சாட்சிப்படி வாக்களித்தல் என்பது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். தேர்தல் முறைகேடுகள், வேட்பாளர்களின் தவறுகள் போன்றவற்றிற்காக, ஒருவர் தனது வாக்குரிமையைப் பயன்படுத்தாமல் இருக்கக்கூடாது. அச்சமின்றி மறைமுக வாக்குதனைச் செலுத்த வேண்டும்.

## பணி ஏற்பு

வாக்குரிமையைப் போல அரசு ஆணையிடும் பொதுப் பணிகளை அல்லது அலுவல்களை ஏற்றுச் செயல்படுவதும் எல்லோரது கடமை. ஊழல்களைக் கட்டுப்படுத்த ஒருவர் இலஞ்சம் (கையூட்டு) கொடுப்பதைக் கைவிட வேண்டும். எனவே நேர்மையான வழிகளைக் கைக்கொள்ளுதல் என்பதும் மக்களின் கடமையாகும்.

## அரசுடன் ஒத்துழைப்பு

அரசு என்பது மக்களுக்காகச் செயல்படுவது. மக்களின் ஒத்துழைப்பு இல்லையெனில் அரசுப் பணிகள் செவ்வனே நடைபெறாது; சட்டம், ஒழுங்கு அமைதி ஆகியன பாதிக்கப்படும். மேலும் அரசுக்குத் தெரியாமல் நடக்கும் முறைகேடுகள், தவறுகள் ஆகியவற்றை அரசுக்குத் தெரிவிப்பது மக்களின் கடமையாகும். அரசு உருவாக்கிய அமைப்புகளில் பங்கேற்றுத் தம்முடைய கடமைகளை ஆற்ற வேண்டும். நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக உள்ள தீய சக்திகளைக் களைய அரசுக்கு உதவ வேண்டும். அத்துடன் தீவிரவாதம், சுரண்டல் போன்றவற்றைக் கட்டுப்படுத்த உதவுவதும் மக்களின் கடமை ஆகும்.

- - -

# 5

## மனித உரிமைகளின் வரலாறும் பண்புகளும்

அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும் அனைவருக்கும் பொதுவானவை. மக்கள் அவற்றைப் பெற்றுச் சிறக்க உரிமையுடையவர்கள். அவ்வுரிமைகள் பலதரப்பட்டவை என்பதை ஏற்கனவே கண்டோம். அனைத்து மக்களுமே உரிமைகளுடன் பிறந்தார்கள். ஆனால் அவை காலப்போக்கில் பல மாற்றங்களுக்கு உள்ளாயின. சூழல், சமூக அமைப்பு, அரசியல் வேறுபாடு, தனிநபர் வாழ்க்கை முறை, பொருளியல் சிக்கல், பண்பாட்டு மாற்றம் போன்றவையனைத்தும் உரிமைகளின் வளர்ச்சி மற்றும் மாற்றங்களுக்குக் காரணமாயின. எனவே மனித உரிமைகளின் வரலாற்றை அறிவது இன்றியமையாததாகும்.

உரிமைகளின் வரலாறு தொன்மைக்காலத்தது. ஆனால் அண்மைக் காலத்தில் தான் உரிமைகளைப் பற்றிய கருத்துக்கள் செல்வாக்குப் பெற்றன. வரலாற்றுப் பக்கங்களில் அவை சமயம், பண்பாடு, தத்துவம், சமுதாயம், சட்டம் போன்றவற்றைச் சார்ந்திருந்தன என்னும் சான்றுகள் உண்டு. பண்டைக்காலத்தில் மனிதர்கள் இயற்கையான உரிமைகளை இயல்பாகப் பயன்படுத்தினர். ஆனால் அவ்வுரிமைகளைப் பற்றி அவர்கள் பெரிதுபடுத்தவில்லை. ஏனெனில் உரிமைகளுக்கான எதிர்ப்புகள் இல்லை. ஆயினும் உரிமைகளைப் பற்றிய சட்டங்கள் நான்காயிரம் ஆண்டுகட்கு முன்பாகவே இருந்தன என்னும் வரலாற்றுச் சான்றுகள் உண்டு. எனவே அவற்றைப் பற்றிக் காண்போம்.

கி.மு. 3260ஆம் ஆண்டில் லகாய் நாட்டு மன்னர் ருக்கினா என்பவரும், பின்னர் கி.மு. 2300-இல் அந்நாட்டின் மன்னர் சர்கான் என்பாரும் மனித உரிமைகளைச் செயல்படுத்தும் சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தினர். தொடர்ந்து கி.மு. 2130 முதல் 2088 வரை வாழ்ந்த பாபிலோனிய மன்னரான ஹமுராபி தனது சட்டத்தொகுப்பில் உரிமைக்கு முக்கியத்துவம் நல்கியிருந்தார். என்பதை அச்சட்டத் தொகுப்பு வெளிப்படுத்துகின்றது. சொத்துரிமை பற்றிய சட்டத்தில் தகப்பனாரின் சொத்துக்கள் அவரது மகன்களைச் சாரும் என்று கூறப்பட்டுள்ளது. நிர்வாகம், நிதி, திருமணம் போன்றவற்றையும் அது விளக்கியுள்ளது. இச்சட்டங்கள் கடுமையானவையாயிருந்தன. சட்டத்தில் இரக்கம் என்பது குறைவாகவேயிருந்தது. இக்கொடூரமான சட்டங்கள் அனைத்துக் காலங்களுக்கும் பொருந்துவன அல்ல.

ரோமானியச் சட்டங்களும் பழங்காலத்தில் பல உரிமைகளை நல்கியிருந்தன. கி.மு. 450-இல் இயற்றப்பட்ட ரோமானியச் சட்டங்களுள் மனித உரிமைகளைத் தந்த சட்டங்களும் இருந்தன. பாரசீகப் பேரரசர் சைரஸ் கி.மு 539-இல் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். பாபிலோனியப் பேரரசைக் கைப்பற்றிய பின் இத்தகைய சட்டங்கள் வெளிப்பட்டன. கி.மு. 272 முதல் 231-வரை அரசோச்சிய அசோக மாமன்னர் தனது பாறை, குகை மற்றும் கற்றூண் ஆணைகளின் வாயிலாக உரிமைகள், கடமைகள் ஆகியவற்றைப் பற்றி வெளியிட்டார். கி.பி. 622-இல் மதீனாவின் முக்கிய பிரிவினரிடையே ஒரு உடன்பாட்டை ஏற்படுத்த உருவாக்கிய மதீனா அரசியலமைப்பு முகமதியர், யூதர் போன்ற பலருக்கு முக்கியமானதாயிற்று.

## மகாசாசனம்: (1215)

இங்கிலாந்தில் 15, ஜுன் 1215-இல் ஜான் மன்னரால் ரன்னிமீட் என்ற இடத்தில் வெளியிடப்பட்ட மகாசாசனம் (Magna Carta) ஆங்கிலச் சட்ட வரலாற்றிலும் அரசியலமைப்பு வரலாற்றிலும் முக்கியமானது. அது பன்னாட்டுச் சட்டங்களுக்கும் அரசியலமைப்புக்கும் இன்றும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் இரண்டாம் பகுதியானது

மன்னர் மக்களுக்கு வழங்கிய உரிமைகளைப் பற்றிக் கூறுகின்றது. சமநீதி, சமய உரிமை ஆகியனவும் அதன் மூலம் விளக்கப்பட்டுள்ளன. ஆங்கில மக்களுக்குத் தரப்பட்ட தொடக்கக் கட்ட உரிமைச் சாசனமாக அது அமைந்துள்ளது.

**உரிமை விண்ணப்பம்: (1628)**

தற்கால நடைமுறைக்கேற்ப மனித உரிமைகளை விளக்கி பல மனித உரிமைச் சட்டங்கள் இயற்றப்பட்டன. 1628-இல் ஆங்கிலப் பாராளுமன்றம் முதலாம் சார்லஸ் மன்னரின் வரம்பற்ற அதிகாரங்களைக் கட்டுப்படுத்த உரிமை **விண்ணப்பம்** (Petition of Rights) ஒன்றை மன்னரிடம் வழங்கியது. மன்னர் ஒப்புதல் வழங்கியமையால் அது சட்டமாயிற்று. அதன்படி ஆங்கில ஆட்சி கட்டுப்படுத்தப்பட்ட முடியாட்சியாக ஆயிற்று. சட்டத்தின் ஆட்சியும் தொடங்கியது. இறைமையானது மன்னரிடமிருந்து பாராளுமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இதன்படி யாரையும் விசாரணையின்றி சிறையிலடைப்பதைத் தடுக்கும் உரிமை தரப்பட்டது. இதன் ஒவ்வொரு பிரிவும் மக்களின் உரிமை சார்ந்ததாக விளங்கியது.

**அரசத் துரோக தண்டனைச் சட்டம் 1641** (Act of Attainder)

இச்சட்டப்படி அரசனைவிட நாட்டின் சட்டமே மேலானது என்ற உரிமை நிலைநாட்டப்பட்டது. "சட்டத்தின் ஆட்சி" என்ற கோட்பாடு நிலைநாட்டப்பட்டது. இதன் மூலம் ஆங்கில மன்னரின் சிறப்பு நீதிமன்றங்கள் நாட்டின் பொதுச் சட்டங்களுக்கு உள்ளானவை என்பது நிலைநாட்டப்பட்டது.

**ஹேபியஸ் கார்ப்பஸ் சட்டம் (1679)** (Habeas Corpus Writ)

இது தனிநபர் உரிமையைப் பாதுகாக்க உருவாக்கப்பட்டதாகும். குற்றம் சாட்டப்பட்டு சிறைப்பட்ட ஒருவருக்கு அவர் சிறைப்பட்டதற்கான காரணத்தைக் கூற வேண்டும். அத்துடன் குற்றமற்றவரென்று விடுவிக்கப்பட்ட ஒருவரை மீண்டும் அதே குற்றத்திற்காகச் சிறையிலடைக்க முடியாது. இதை மீறும் அதிகாரிகளும் தண்டனைக்குள்ளாவர் என்று கூறப்படுகின்றது. இதை தனிநபர் உரிமைக்கான பாதுகாப்பு எனலாம்.

**உரிமைகள் மசோதா (1689)** (Bill of Rights)

இச்சட்டம் இரண்டாம் ஜேம்ஸ் மன்னர் காலத்தில் இயற்றப்பட்டது. இங்கிலாந்து நாட்டில் நிலவிய ஒடுக்குதலுக்கு வழிவகுக்கும் முறைகளை இது நீக்கியது. இச்சட்ட வரைவில் மக்கள் மன்னருக்கு விண்ணப்பிக்கும் உரிமை, பாராளுமன்ற உறுப்பினர்களைக் கட்டுப்பாடுகளின்றித் தேர்ந்தெடுக்கும் உரிமை, கருத்துத் தெரிவிக்கும் உரிமை போன்ற தனிநபர் உரிமைகள் வலியுறுத்தப்பட்டன. இச்சட்டம் இங்கிலாந்தின் எழுதப்படா அரசியலமைப்பில் எழுதப்பட்டதோர் உறுப்பாகத் திகழ்கின்றது.

**ஹியூகோ** குரோஷியே (1583-1645) "சர்வதேசச் சட்டம் மற்றும் இயற்கைச் சட்டங்களின் தந்தை" எனப்பட்ட டச்சுக்காரரான ஹியூகோ குரோஷியே, மனிதர்களின் சுதந்திரநிலை, சமத்துவ நோக்கு, பிறரது உரிமைகளுக்கும் சட்டங்களுக்கும் மதிப்பளித்தல் என்பன பற்றிக் கூறுகின்றார்.

**ஜீன் ஜாக்ஸ் ரூஸோ "சமூக ஒப்பந்தம்"** (Social Contract) என்ற நூலை எழுதினார். அதில் அவர் சுதந்திரமாகப் பிறந்த மனிதன் எல்லா இடங்களிலும் விலங்கிடப்பட்டுள்ளான் என்று அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் (1776), பிரான்சு நாட்டின் மனித உரிமைப் பிரகடனம் (1789) ஆகியவற்றில் இணைக்கப்பட்டுள்ள உரிமைகளைச் சுட்டிக்காட்டினார். அவற்றின் மூலம் சட்ட உரிமைகள் வலுப்பெற்றன.

**அமெரிக்க முயற்சிகள்:**

1765-இல் சுதந்திர மைந்தர்கள் (Sons of liberty) என்ற அமெரிக்க அமைப்பு ஆங்கில எதிர்ப்புணர்வை விரிவடையச் செய்தது. உரிமைகள் பற்றி வர்ஜீனியா அறிவிப்பு (Virginia Declaration of Rights) அடிப்படை உரிமை, விடுதலை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு 4, ஜூலை 1776-இல் வெளியிடப்பட்டது. தாமஸ் ஜெப்பர்சன் என்பவரால் எழுதப்பட்டது. மனிதன் பிறக்கும் போது எவ்விதமான பாகுபாடுமின்றி சமமான உரிமைகளோடு பிறக்கின்றான். உயிர்வாழ்தல், தன் விருப்பம் போல் நடத்தல், மகிழ்வு பெறல் என்பன போன்றவற்றில்

**பன்னாட்டு விதிமுறைகளும் மனிதாபிமானச் சட்டங்களும்:**

1864க்கும் 1944க்கும் இடைப்பட்ட காலத்தில், ஹென்றி டுனாண்ட் என்பவரின் முயற்சியால் எழுந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் பன்னாட்டுக் குழு மனித உரிமைகளைப் பாதுகாக்கும் முயற்சியாயிற்று. அது 1899, 1907 ஆகிய ஆண்டுகளின் திஹேக் மாநாடுகளுக்குக் காரணமாயிற்று. இவை ஜெனீவா உடன்பாட்டிற்கு வித்திட்டன.

1920-இல் தோன்றிய சர்வதேச தொழிலாளர் அமைப்பு, 49 மாநாடுகள் மூலம் தொழிலாளர் உரிமையையும் நலனையும் பற்றி எண்ணியது. 1899க்கும் 1907க்கும் இடைப்பட்ட காலத்தில் திஹேக் உடன்பாடுகளின்படி போர்களைப் பற்றிய விதிமுறைகள் உருவாக்கப்படவும், போர்க் கைதிகளைப் பற்றி முடிவு செய்யவும் சமயச் சார்பற்ற பன்னாட்டுச் சட்டம் இயற்றவும் வகை செய்யப்பட்டது. இதன் விளைவாகவே 1939க்கும் 1945க்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளால் பன்னாட்டுச் சமுதாயத்தைப் பற்றி எண்ணும் முயற்சி 1949-இல் மீண்டும் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையில் தொழிலாளர் நல அமைப்பு தொழிலாளர் உரிமைகளை நிலைநாட்டியது. 8 மணி நேர வேலை, ஓய்வுக்கேற்ற ஊதியம், சுரண்டல்கள் தவிர்ப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகளை ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்துதலைத் தவிர்த்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. சர்வதேச சங்கம் சிறுபான்மையினர் சிக்கல்கள், சுகாதாரக் கேடு ஆகியவற்றைக் களைய வகை செய்தது. 1925-இல் நடந்த ஜெனீவா அடிமை ஒழிப்பு மாநாடு, 1932-இல் தோன்றிய நிரந்தர அடிமை ஒழிப்பு ஆணையம் ஆகியன அம்முயற்சியில் வெற்றி பெற்றன.

1941-இல் ரூஸ்வெல்ட் அமெரிக்க காங்கிரசில் அறிவித்த பேச்சுரிமை, வழிபாட்டு உரிமை, அச்சம் மற்றும் தேவைகளிலிருந்து விடுதலை போன்ற கருத்துக்கள் உலக நாடுகளிடையே விழிப்புணர்வை உருவாக்கின. 1941-இல் வெளியான அட்லாண்டிக் சாசனம் 1942-இல் வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் பிரகடனத்திற்கு முன்மாதிரியாயிற்று. அதில் மக்களின் சுயநிர்ணய உரிமை, பொருளாதார சமத்துவம், உலக அமைதி போன்றவை வலியுறுத்தப்பட்டன.

1943-இல் நடந்த டெக்ரான் மாநாடு உலக நாடுகளின் சமத்துவத்தைப் பற்றிக் கூறியது. 1945 ஜனவரியில் நடைபெற்ற யால்ட்டா மாநாடு, தொடர்ந்து நடைபெற்ற சான்பிரான்சிஸ்கோ மாநாடு ஆகியவற்றின் முயற்சியால் ஐக்கிய நாட்டவையின் சாசனத்திற்கு இறுதி வடிவம் தரப்பட்டது.

**ஐக்கிய நாட்டவையின் பணிகள்**

ஐ.நா. வின் சாசனமானது ஆண் பெண் இருவரும் அனைத்து உரிமைகளையும் பெற்று சமத்துவத்துடன் நேர்மையாக, தன்மானத்தோடு வாழ வகை செய்துள்ளது. ஐ.நா. பொதுச்சபையானது மனித உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய பல பணிகளை ஆற்றுகின்றது. உரிமைகள் பற்றிய தீர்மானம் பொதுச்சபையில்தான் கொண்டுவரப்படுகின்றது. ஐக்கிய நாட்டவையின் பாதுகாப்பு சபை, அறங்காவலர் குழு ஆகியன ஜெனீவாவிலுள்ள செயலகத்தின் வாயிலாக பல பணிகளை ஆற்றுகின்றன. மனித உரிமைகளின் தன்மைகளுக்கேற்ப சிறப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு செயல்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. நிறவெறி, தீவிரவாதம், அடிமை முறை, கொத்தடிமை முறை ஆகியவற்றை நீக்கி, மகளிர், சிறுவர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரைப் பாதுகாத்தல் போன்ற வழிகளில் ஐ.நா. சிறப்புப் பணியாற்றுகின்றது.

1966-இல் வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை, பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கை ஆகியவற்றை ஐ.நா. பொதுச்சபை வெளியிட்டது.

1948-டிசம்பர் 10-இல் சர்வதேச (பன்னாட்டு) மனித உரிமைகள் பிரகடனம் ஐ.நா. சபையால் வெளியிடப்பட்டது. (இதைப் பற்றி விளக்கமாகப் பின்னர் காண்போம்). 1963ஆம் ஆண்டின் இன ஒதுக்கல் ஒழிப்புப் பிரகடனம், 1959ஆம் ஆண்டின் குழந்தைகள் உரிமைப் பிரகடனம், 1960ஆம் ஆண்டின் குடியேற்ற நாடுகளுக்கான சுதந்திரப்

பிரகடனம், இயற்கை ஆதாரங்கள் இறையாண்மைப் பிரகடனம் (1962). இவற்றைப் போல ஆறு ஒப்பந்தங்களின் வாயிலாக மனித உரிமைச் சட்டங்களுக்கு ஒரு வடிவம் கொடுக்க முற்பட்டது.

வேறுபாடுகளை நீக்கி சமத்துவம் காண்பதற்கான ஒப்பந்தம் 1965-இல் மேற்கொள்ளப்பட்டது. 1966-இல் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் சார்ந்த பன்னாட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1966-இலேயே குடிமையியல் மற்றும் அரசியல் உரிமை குறித்த சர்வதேச ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டது. 1979-இல் பெண்கள் உரிமையை நிலைநாட்டுவதற்கான சர்வதேச ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1984-இல் குழந்தைகளுக்கான உரிமைகள் பற்றிய ஒப்பந்தம் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் மூலம் ஐக்கிய நாட்டவை மேற்கொண்டுள்ள உரிமைகள் பற்றிய செயல்களை நன்கறியலாம்.

ஐக்கிய நாட்டவையின் மனித உரிமை ஆணையம் உரிமைச் சிக்கல்களை விசாரிக்கின்றது. மனித உரிமை பற்றிய தகவல்கள், ஆய்வுகள் ஆகியவற்றின் மூலம் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 1993-இல் நியமிக்கப்பட்ட ஐ.நா. மனித உரிமை ஆணையர் ஐ.நா. உறுப்பு நாடுகளில் மக்களிடையே உரிமைகளைப் பற்றிக் கூறுகின்றார். மேலே கூறப்பட்டுள்ளவற்றைப் போல உரிமை மேம்பாட்டிற்காகப் பல அமைப்புகளையும் கொண்டுள்ளது.

**மனித உரிமை ஆணையம்:**

1946 பிப்ரவரியில் இந்த ஆணையம் தோன்றியது. 2007-இல் இது மனித உரிமைகள் கவுன்சில் என்றழைக்கப்பட்டது. இதில் 47 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உண்டு. 19, ஜூன் 2007-இல் இதன் முதல் கூட்டம் ஜெனீவாவில் நடைபெற்றது. இவ்வுறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகள். இது ஆண்டுக்கு ஒரு முறை கூடும். மனித உரிமைகள் சட்ட வரைவை உருவாக்குதல், வாழ்வியல், பெண்ணியல் மற்றும் தகவல் பெறும் உரிமைகள் பற்றிய பிரகடனங்களைத் தயாரித்தல், சிறுபான்மையினர் பாதுகாப்பு, பல்வேறு வகையான வேறுபாடுகளைத் தவிர்த்தல், மற்றும் மனித உரிமை பற்றிய

செய்திகளை சேகரித்தல் போன்றவற்றில் அது கவனம் செலுத்தியது. உரிமைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு தொடர்ந்து செய்ய வேண்டிய பணிகளை அறிவிக்கின்றது. தனிநபருடனும் அரசுகளுடனும் இணைந்து செயல்பட்டு மனித உரிமைகளைப் பாதுகாக்க வகை செய்கின்றது.

**சிறுபான்மையினர் பாதுகாப்பு மற்றும் வேற்றுமைகள் தவிர்ப்பு சார்பு ஆணையம்:**

இந்த சார்பு ஆணையம் 1947-இல் மனித உரிமைகள் ஆணையத்தின் சங்கமாக உருவாக்கப்பட்டது. பெயருக்கு ஏற்ப மனித உரிமைகள் பற்றிய செய்திகளை மனித உரிமை கவுன்சிலுக்கு அறிவிக்கின்றது. இதில் 26 உறுப்பினர்கள் உண்டு. அவர்கள் மூன்றாண்டு பதவி வகிப்பர். சிறுபான்மையினர், பழங்குடியினர், குழந்தைகள், கைதிகள், பெண்கள் ஆகியோரின் உரிமைகளைப் பற்றி விவாதித்து முடிவு செய்கின்றது.

**பெண்களின் நிலை பற்றிய ஆணையம்:**

இது 1946-இல் ஐ.நா.வின் பொருளாதார, சமூக சபையினால் உருவாக்கப்பட்டது. பல்வேறு நிலைகளில் பெண்களின் உரிமைகளை இது பட்டியலிட்டு தன்னை உருவாக்கிய சபையிடம் சமர்ப்பிக்கின்றது. ஆண்-பெண் சமத்துவத்தைச் செயல்படுத்த விழைகின்றது. இதில் 45 உறுப்பினர்கள் உண்டு. அவர்கள் மூன்றாண்டுகள் பதவியிலிருப்பர். பெண்களின் பன்முகப் பொருளாதார வளர்ச்சிக்கு இது உதவுகின்றது. பெண்கள் மீதான வன்முறை, சமவேலைக்கு சம ஊதியத்தைப் பெண்கள் பெறாமை, பெண்களின் கீழ்நிலை போன்ற செய்திகளை ஆய்வு செய்து தனது முடிவுகளையும் பரிந்துரைகளையும் தெரிவிக்கின்றது.

**ஐ.நா. மனித உரிமைகள் மையம்:**

இது ஜெனீவாவிலிருந்து செயல்படுகின்றது. மனித உரிமைகள் பற்றிய செயல்களை ஒருங்கிணைக்க இம்மையம் உதவுகின்றது. இதன் செயல்பாட்டிற்காகத் தனிப்பட்ட நிதி உண்டு. இதன் மூலமாக ஐ.நா. வின் மனித உரிமைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு உறுப்பு நாடுகளால்

நடைமுறைப்படுத்தப் படுகின்றன. பயிற்சிகள், ஆலோசனை ஆகியவற்றையும் உரிமைகள் அடிப்படையில் நல்குகின்றது. மனித உரிமைகளை நடைமுறைப்படுத்தும் செயல்திட்டங்களை உறுப்பு நாடுகளுக்கு வழங்குகின்றது.

**மனித உரிமைக் காவல் மேலாளர்:**

20, டிசம்பர் 1993-இல் இப்பதவி உருவாக்கப்பட்டது. பொதுச் செயலாளரால் நான்கு ஆண்டுகள் பதவியிலிருக்குமாறு நியமிக்கப்படுகின்றார். ஜெனீவாவிலிருந்து செயல்படுகின்றார். உரிமைகள் பற்றிய பல அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுகின்றார். தனிமனிதர்களின் பல்வேறு வகையான உரிமைகளை இவரது செயல் பாதுகாக்கின்றது. உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகளை அகற்றுகின்றார். உரிமைகள் மீது ஆலோசனைகளை நல்குகின்றார். தன்னுடைய செயல்களை ஆண்டறிக்கைகளாக மனித உரிமைக்குழு மற்றும் பொதுச் சபையில் சமர்ப்பிக்கின்றார்.

**மனித உரிமை பற்றிய பிற ஐ.நா. அமைப்புகள்:**

தனிநபர் உரிமைகள் பற்றிய சிறப்புக் கண்காணிப்பாளர்கள் பலர் உள்ளனர். 1982-இல் நீதிமன்ற விசாரணைக்குப் பின்னர் நீதி வழங்குவதைக் கண்காணிப்பாளரின் தன்னிச்சையான விசாரணை மூலம் தண்டனை வழங்கல் தவிர்க்கப்படுகின்றது. 1984-இல் நியமிக்கப்பட்ட சித்திரவதைக்கு எதிரான கண்காணிப்பாளர், முறையற்ற வழிகளில் உண்மையை வரவழைக்க முயல்வது தவறு என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். 1986-இல் மத சகிப்புத் தன்மையைக் கண்காணிக்கும் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டார். 1987-இல் மக்களின் சுயாட்சி உரிமைச் சிறப்புக் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டு சுயாட்சி உரிமையைத் தடுக்கும் முயற்சிகள் தடை செய்யப்பட்டன. 1990-இல் குழந்தைகளை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடைசெய்யத் தனிக் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டார். 1994-இல் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான சிறப்புக் கண்காணிப்பாளரும்,

நீதிபதிகளின் சுதந்திரமான செயலுக்கான கண்காணிப்பாளரும், கருத்து வெளியிடும் உரிமைக் கண்காணிப்பாளரும் நியமிக்கப்பட்டனர். 1998-இல் கல்வி உரிமைக் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டார்.

மேலே கூறியவற்றால் மனித உரிமையின் பல பிரிவுகளைப் பாதுகாக்க ஐக்கிய நாட்டவை மேற்கொள்ளும் முயற்சிகளை நன்கறியலாம். அதற்காக அது மேற்கொண்ட பல வழிமுறைகளையும் உணர்தல் வேண்டும். ஐக்கிய நாட்டவையானது உரிமைகளின் பாதுகாவலனாகும். இதனை மேலே கூறப்பட்டுள்ள ஐ.நா. வின் உள் அமைப்புகள் வெளிப்படுத்தும். மனித உரிமைகளைப் பாதுகாக்கும் ஐக்கிய நாட்டவை மனித உரிமைகள் மீறப்படும் போதும், உரிமைகள் தடுக்கப்படும்போதும் ஒரு சேவை மையமெனச் செயல்படுகின்றது.

**பிராந்திய அமைப்புகள்**

ஏராளமான பிராந்திய அமைப்புகள் உலக அமைதிக்காகவும் உரிமைகளைப் பாதுகாக்கவும் செயல்பட்டன. அவற்றைப் பற்றி தெரிந்து கொண்டால்தான் மனித உரிமைகளின் வளர்ச்சி நிலைகளை நாம் நன்கறியலாம்.

**ஐரோப்பியக் குழு:**

ஐக்கிய நாட்டவையானது உலகளாவிய வகையில் உரிமைகள் பற்றிய செயல்களில் ஈடுபட்ட போது தனிப்பட்ட உலக அமைப்புகள் உருவாக்கப்பட்டன. இந்நிலையில் 1949-இல் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பானது 1950-இல் உரிமைகள் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கியது. இதனைச் செயல்படுத்த வேண்டுமென்பதற்காக **ஐரோப்பிய மனித உரிமை ஆணையம், ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றம்** போன்ற உறுப்புகள் உருவாக்கப்பட்டன. பல வழக்குகள் இந்நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டன. அதைப் போல 1961-இல் உருவாக்கப்பட்ட **ஐரோப்பிய சாசனம்** சித்ரவதை செய்வதும் துன்புறுத்துவதும் மனிதனது உரிமையை பறிப்பதாகும் என்ற கருத்தில் அச்செயலைத் தடுக்க உருவாக்கப்பட்டது.

அமெரிக்க நாடுகள் கூட்டமைப்பின் வாயிலாக அமெரிக்காவில் மனித உரிமைகளைக் காத்து மேன்மை பெற வழிகள் மேற்கொள்ளப்பட்டன. 1948-இல் இவ்வமைப்பின் வாயிலாக அமெரிக்க மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டது. 1948இலேயே பெண்களுக்கான அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகள் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு பெண்ணியத்தின் பெருமை போற்றப்பட்டது. தொடர்ந்து மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் 1969-ஆம் ஆண்டில் அனைத்து அமெரிக்க மனித உரிமைகள் ஆணையமும், மனித உரிமைகள் நீதிமன்றமும் உருவாக்கப்பட்டன. இவை அமெரிக்க மக்களின் மனித உரிமைப் பாதுகாப்பிற்குச் சான்றுகளாய் உள்ளன.

## ஆப்பிரிக்க ஒற்றுமைக் கழகம்

இவ்வமைப்பு ஆப்பிரிக்க நாடுகளின் மனித உரிமைகளைப் பேண உருவாக்கப்பட்டது. தன்னுடைய ஆக்கப் பணிகளை நிலைநாட்ட 1987-இல் ஆப்பிரிக்க மக்கள் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் மூலம் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான வழிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் உரிமை மீறல்கள் தடுக்கப்பட்டு மனித இனம் ஒற்றுமையாகக் காக்கப்பட வழிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மனித உரிமைகள் திடீரென்று தோன்றியவையல்ல. இயற்கை தந்த உரிமைகள் படிப்படியாக காலப்போக்கில் உணரப்பட்டு விரிவு பெற்றன. இன்று உரிமைகள் அனைத்து நாடுகளாலும் ஏற்கப்பட்டு அரசுப் பொறுப்பில் உள்ளன. ஒவ்வொரு நாடும் தன்னுடைய அரசியலமைப்பில் உரிமைகளை இணைத்துள்ளன. உரிமைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, பன்னாட்டு அவையான ஐக்கிய நாட்டவை உரிமைகளைப் பெருக்க, பேணிப் பாதுகாக்க பல அரிய, நல்ல முயற்சிகளை மேற்கொண்டு சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே உரிமைகள் மனித குலத்தின் மேம்பாட்டிற்கான அடிப்படை என்பது உணரப்பட்டுள்ளது.

- - -